நோர்வேயில் வெளியான முதல் தமிழ் பாடநூல்



பகீரதி குமரேந்திரன்

www.diasporatamil.no

நாட்டுப்பற்றாளர்
பிலோமினம்மா ஜோர்ஜ்

Folkehelt/ Patriot
Philominamma George
(20.05.1941 - 26.12.2004)

www.diasporatamil.no

நாட்டுப்பற்றாளர் பிலோமினம்மா ஜோர்ஜ் மற்றும் டிசம்பர் 2004 ஆழிப்பேரலை அனர்த்தத்தின் போது உயிரிழந்த அனைத்து உயிர்களின் நினைவாக. நோர்வேயில் உள்ள தமிழ்ப் பள்ளிக்கூடங்களிலும் அதற்கு வெளியிலும் தமிழ்மொழிக் கற்பித்தலில் பங்களித்த மற்றும் பங்களித்து வரும் அனைத்து மொழி/சமூக ஆர்வலர்களுக்கும் மற்றும் தன்னார்வலர்களுக்கும் நன்றிகள்.

ஒசுலோ, 26.12.2024

முதல் பதிப்பு, 2024

எழுத்தாளர்: பகீரதி குமரேந்திரன்
© DiasporA Tamil Archives. Desember 2024



Første lærebok på tamil utgitt i Norge by [DiasporA Tamil Archives](http://www.diasporatamil.no)is licensed under CC BY-SA 4.0

ISBN Tamil (PDF): 978-82-693920-1-2

DiasporA Tamil Archives
Oslo, Norge
diasporatamil@hotmail.com
www.diasporatamil.no

உள்ளடக்கம்

நோர்வேயில் வெளியான முதல் தமிழ் பாடநூல் 4

அறிமுகம் 4

நோர்வேயில் தமிழ் பாடநூல் திட்டம் 10

1990 களில் நோர்வேயியப் பாடத்திட்டம் 10

பேர்கனில் தாய்மொழிக் கல்வி 10

பிலோமினம்மா ஜோர்ஜ் (1941-2004) 11

«தமிழ் 1» தமிழ் பாடநூல் 17

கணினியில் தமிழ் 18

பாடநூல் திட்டத்தை கைவிடுவதா? 19

"தமிழ் 1" இன் தொடர்ச்சி 21

வெளியீடு 23

எழுத்து அறிமுகக் கல்வி 23

சொற்கள் மற்றும் சொற்கூறுகள் 27

ஈழத்தில் தமிழ் பாடநூல் 29

«தமிழ் 2» தமிழ் பாடநூல் 30

நோர்வேயில் தமிழ்மொழிக் கற்பித்தல் மற்றும் தமிழ் பள்ளிக்கூடங்கள் 33

மேற்கோள்கள் 36

நோர்வேயில் வெளியான முதல் தமிழ் பாடநூல்

- பகீரதி குமரேந்திரன்

அறிமுகம்

"ஒரு பிள்ளை தங்கள் சொந்த மொழியில் தனது முதல் பாடநூலைப் பெறுவது பலருக்கு ஒரு நிச்சமான விடயம். தமிழ் சிறுவர்களுக்கு அவ்வாறு அல்ல. இது நோர்வேயில் வளரும் இலங்கையைச் சேர்ந்த சிறுவர்களுக்கு அவர்களின் சொந்த மொழியில் முதல் அறிமுகம் வழங்கும் முதல் பாடநூல் ஆகும். இந்த பாடநூல் M-87 ஐ அடிப்படையாகக் கொண்டு மற்றும் நோர்வே வாழ் சிறுவர்களின் அன்றாட வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டது.» - அன்னே-லிஸ் ஒவ்ரபொத்தன் (Anne-Lis Øvrebotten)[1]

1980களின் முற்பகுதி தொடக்கம், தமிழ்ப் பின்னணியைக் கொண்ட முதல் பள்ளிக்கூடப் பருவ சிறுவர்கள் நோர்வேயில் வளர்ந்து வர ஆரம்பித்தனர். அக்காலத்தில் குடும்பங்கள் தமது பிள்ளைகளுக்குத் தமிழ்மொழிக் கல்வியை வீட்டில் கற்பித்து வந்தனர். பிற்காலத்தில், ஒழுங்கமைக்கப்பட்ட தமிழ்மொழிப் பள்ளிக்கூடங்கள் நோர்வேயில் ஆரம்பிக்கப்பட்டன.

பேர்கன்: பேர்கன் தமிழ்ச் சிறுவர் பாடசாலை (Bergen tamilsk barneskole) 28.03.1987 அன்று அன்ரனி இராஜேந்திரம்[2] அவர்களின் முயற்சியால் பேர்கனில் ஆரம்பிக்கப்பட்டது. இதுவரை அறிந்தபடி, இப்பள்ளிக்கூடம் நோர்வேயில் ஆரம்பிக்கப்பட்ட முதல் தமிழ்ப் பள்ளிக்கூடம் என்று பரவலாகக் கருதப்படுகின்றது. இந்தத் தமிழ்ப் பள்ளிக்கூடம் தனது சேவையை 30.06.2019 அன்று நிறைவு செய்து, இன்று நோர்வே வாழ் தமிழரின் வரலாற்றுப் பாரம்பரியத்தில் ஒரு அங்கமாகத் திகழ்கின்றது.

ஒசுலோ: பெயர் சூட்டப்படாத ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட தமிழ்மொழிக் கற்பித்தல் 1988 இல் தமிழ் நோர்வே மக்கள் இணைவுக்கூடத்தின் (tamilsk-norsk forening/ tamilsk-norsk kafe)[3] ஒரு செயற்பாடாக தொய்யன் தேவாலயத்தில் ஆரம்பிக்கப்பட்டது. 1989 ஆம் ஆண்டு தொய்யன் தேவாலயத்தில் மேற்கொள்ளப்பட்ட மறுசீரமைப்புப் பணியின் காரணமாக தமிழ்மொழிக் கற்பித்தல் கம்பனில் (Kampen) உள்ள ஒரு நகராட்சிக் கட்டடத்திற்கு மாற்றப்பட்டது, அதே ஆண்டு அங்கு ஒரு தீ விபத்து ஏற்பட்டதன் காரணமாக இந்தச் சேவை 1990 காலப்பகுதியில் நிறுத்தப்பட்டு, 1993-1994 காலப்பகுதியில் முத்தமிழ்

---

[1] தமிழாக்கம் (George, 1995, p. 4)

[2] அன்ரனி இராஜேந்திரம் (20.06.1932-12.09.1990) அவர்கள் ஈழத்திலிருந்து (இலங்கை) நோர்வேக்கு வந்த முதல் தமிழர் ஆவார். அவர் 1956 கோடைகாலத்தின் பிற்பகுதியில் பேர்கனில் கால் பதித்தார். நோர்வேயில் தமிழ்ச் சமூக உருவாகத்தின் ஆரம்பப் புள்ளியாக இவரது வருகை கணிக்கப்படுகின்றது. இருப்பினும், மலையப்பன் 1715 இல் தமிழ்நாட்டிலிருந்து நோர்வேக்கு வந்த முதல் தமிழராக இருக்கலாம். அவர் யெர்மன் லூத்தரன் மிஷனரியான பர்தோலோமஸ் ஜீகன்பால்கின் (Bartholomäus Ziegenbalg) நண்பராக இருந்தார். இருவரும் அரசர் ∴பிரடெரிக் IV (Kong Frederik IV 1671–1730) ஐ சந்திப்பதற்காக நோர்வேக்கு வந்து சென்றனர்.

[3] தமிழ் நோர்வே மக்கள் இணைவுக்கூடம் நவம்பர் 1987 இல் தொய்யன் தேவாலயத்தில் ஈழத்தமிழர்களால் நிறுவப்பட்டது. இந்த நிறுவனம் Brønnøysund பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டபோது, அதன் நிறுவப்பட்ட திகதியாக 26.09.1988 என்று பதிவாகியுள்ளது. ஆனால் இத்திகதி Brønnøysund பதிவேட்டில் பதிவு செய்யப்பட்ட திகதி என்று கணிக்கலாம். இந்த நிறுவனத்தை ஆரம்பித்த ஈழத் தமிழர்கள் 1987 முதல் தேவாலயத்தஞ்சம் (kirkeasyl) கோரி தேவாலயத்திற்கு வந்த தமிழர்களாகவும் மற்றும் அவர்களின் நண்பர்களாகவும் இருந்தார்கள். Brønnøysund பதிவேட்டின் அடிப்படையில் முத்தமிழ் அறிவாலயம் நிறுவப்பட்ட திகதி 26.06.1988 ஆகும். *(Brønnøysundregistrene, n.a.-e, n.a.-h)*

அறிவாலயம் (Muthamil Arivalayam) என்ற பெயருடன் ஒரு தமிழ்ப் பள்ளிக்கூடமாக மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

ஒசுலோ: நோர்வே தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினரிடம்[4] ஒசுலோ வாழ் பெற்றோர் முன்வைத்த கோரிக்கையின் அடிப்படையில் 01.02.1992 அன்று அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவால் ஆரம்பிக்கப்பட்டது. ஒரு நிர்வாகக் குழு இயக்கும் ஒரு இறையான்மையுடைய கல்வி நிறுவனமாச் செயற்படத்தொடங்கி, வளர்சியடைந்து இன்று றொம்மன் வளாகமாக சொந்தக் கட்டத்தில் இயங்கிவருகிறது[5]. 2001 ஆம் ஆண்டு முதல், இக் கல்வி நிறுவனம் கிளை வளாகங்களை நிறுவி இன்று நோர்வே முழுவதும் 17 வளாகங்களைக் கொண்டுள்ளது. வளர்ச்சிப்போக்கில் 22.12.2002[6] ஆம் ஆண்டு அன்னை தலைமை நிர்வாகம் நிறுவப்பட்டு அனைத்து வளாகங்களையும் ஒருங்கிணைத்து செயற்பட்டுவருகிறது.

இஸ்ரவங்கர்: இஸ்ரவங்கர் தமிழ் சிறுவர் பாடசாலை (Tamilsk Barn- og Ungdomsaktivitetssenter i Stavanger/ Stavanger Tamil Siruvar Paadasaalai) 1992 ஆம் ஆண்டு ஈழத் தமிழர் சங்கம் றூகலாண்டின் அங்கத்தவர்கள்/ பெற்றோரால் (Eelam Tamilenes Forening i Rogaland) ஆரம்பிக்கப்பட்டது. Brønnøysund அரச பதிவகத்தின் அடிப்படையில் இந்த தமிழ்ப் பள்ளிக்கூடம் 01.08.1992 அன்று நிறுவப்பட்டது[7].

இஸ்ரவங்கரில் தமிழ்மொழி கற்பித்தல் தொடர்பான வரலாற்றில் 1980களின் பிற்பகுதியும் இடம்பெறும். கத்தோலிக்க வணபிதா இருதயநாதன் பேதுருப்பிள்ளையின் முயற்சியால் இஸ்ரவங்கரில் அமைந்துள்ள புனித ஸ்விதுன் கத்தோலிக்க தேவாலயத் திருச்சபை மண்டபத்தில் தமிழ்மொழிக் கற்பித்தல் ஆரம்பிக்கப்பட்டது. அந்தக் காலப்பகுதியில் இஸ்ரவங்கர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள

[4] தமிழர் நலன்புரி மன்றம் எனும் அமைப்பு 1983 ஆம் ஆண்டு நோர்வேயில் நிறுவப்பட்டது. இது ஈழத்தில் கறுப்பு யூலை என்று அறியப்படும் தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலையைத் தொடர்ந்து ஒரு சமூக-அரசியல் அமைப்பாக 1983 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இது 1989 இல் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு என மறுபெயரிடப்பட்டு பரிணாம வளர்ச்சி கண்டது. தமிழர் ஒருங்கிணைப்புக் குழு பல நாடுகளில் உள்ளது. பல நகரங்களிலும் தனது கிளைகளைக் கொண்டுள்ளது.

[5] இன்று அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் (றொம்மன் வளாகமாக அறியப்படுவது) சொந்தக் கட்டத்தில் தமிழ்மொழிக் கல்வி, கலை மற்றும் பண்பாட்டுக்கல்வியை வழங்கி வருகின்றது. இக்கல்வி நிறுவனத்தின் வளர்ச்சிப்போக்கில் சொந்தக் கட்டடத்தின் தேவை 1994 ஆம் ஆண்டு உணரப்பட்டு நிர்வாக மட்டத்தில் உரையாடல் நடைபெற்றுவந்தது. 1996 ஆம் ஆண்டு கட்டடம் வாங்குவது தொடர்பான ஆரம்பக் கட்ட முயற்சிகள் எடுக்கப்பட்டு, 1997 ஆம் ஆண்டு காத்திரமான முடிவும் முயற்சிகளும் எடுக்கப்பட்டன. அதன் அடிப்படையில் பெற்றோர் மற்றும் சமூக ஆர்வலர்களின் பங்களிப்புடன் 09.11.2000 அன்று Nedre Rommen 3 இல் புதிதாக வாங்கப்பட்ட கட்டடத்தொகுதியின் திறப்பு விழா நடைபெற்றது. அதே முகவரியில் அமைந்துள்ள இரண்டாவது கட்டடத்தொகுதி 03.07.2006 அன்று வாங்கப்பட்டது.
10.04.1996 அன்று நிறுவப்பட்ட தமிழர் வள ஆலோசனை மையாம் (TRVS) எனும் அறக்கட்டளை அக்கட்டடத் தொகுதியைப் பராமரித்தும் நிர்வகித்தும் வருகின்றது. TRVS அறக்கட்டளை Brønnøysund அரச பதிவகத்தில் 27.07.1996 அன்று பதியப்பட்டுள்ளது. ஆனால் Brønnøysund அரச பதிவகத்தில் TRVS அறக்கட்டளை நிறுவப்பட்ட திகதியாக 01.02.1992 என்று மாற்றப்பட்டுள்ளது. இது அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் நிறுவப்பட்ட திகதியாகும். (Annai Poopathi Tamilsk Kultursenter - Rommen, 1994, 1997, 2007; Brønnøysundregistrene, n.a.-a, n.a.-f). இந்தச் சொந்தக் கட்டடத்தில் இன்று அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் - றொம்மன், அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் - தலைமை மற்றும் அனைத்துலக தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை (ICEDT) ஆகிய அமைப்புகள் தமது அலுவலகத்தைக் கொண்டுள்ளன.

[6] அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் - தலைமை நிர்வாகம் 22.12.2002 அன்று நிறுவப்பட்டு, அதன் செயல்பாடு 01.01.2003 அன்று ஆரம்பிக்கப்பட்டது (Brønnøysundregistrene, n.a.-b).

[7] (Brønnøysundregistrene, n.a.-d, n.a.-g; Eelam Tamilenes Forening i Rogaland; Tamilsk Barne- og Ungdomsaktivitetssenter - Stavanger, 2007)

பகுதிகளில் குறைந்த எண்ணிக்கையிலான தமிழ் சிறுவர்கள் இருந்தமையால் இந்த முயற்சி சிறிது காலத்தில் முடிவுக்கு வந்தது.

துரண்ணியம்: சிறுவர் மன்றம் (Children Activity Centre) 1995[8] ஆம் ஆண்டில் ஈழத் தமிழர் சங்கம் துரண்ணியம் எனும் அமைப்பால் ஆரம்பிக்கப்பட்டது. சிறுவர் மன்றத்தின் செயல்பாடாக தமிழ்ப் பள்ளிக்கூடம் அதே ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அது முன்பள்ளி கற்பித்தலுக்கான ஒரு ஆறு மாதப் பாடத்திட்டத்தை உருவாக்கியது (27.01.1996 - 06.06.1996).

1990 களிலிருந்து, ஒழுங்கமைக்கப்பட்ட தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் முக்கிய நோர்வேயிய நகரங்களில் நிறுவப்பட்டன. சிறு நகரங்கள் மற்றும் கிராமங்களில் உள்ள தமிழ் சங்கங்கள் குறுகிய அல்லது நீண்ட காலத்திற்கு தமிழ்மொழிக் கற்பித்தல் சேவையை வழங்கி வந்துள்ளன.

1990 களில், ஈழத்[9] தமிழர்கள் அவர்கள் குடியேறிய நாடுகளில் தாய்மொழி கற்பிப்பதற்கான தமிழ் பாடநூல்களை உருவாக்கத் தொடங்கினர். அவ்வாறு நோர்வேயில் வெளியான பாடநூல்கள் இரு வகை ஆகும். ஒருபுறம், நோர்வேயில் உள்ள தமிழ் அமைப்புகளால் உருவாக்கப்பட்ட பாடநூல்கள். அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடத்தால் வெளியான «தமிழ் அமுது» 10 பாடநூல்கள் (1997), முத்தமிழ் அறிவாலயத்தால் வெளியான «தமிழ்» 5 பாடநூல்கள் (2000) மற்றும் அஸ்கர் பாறும் தமிழர் ஒன்றியத்தினால் நடாத்தப்படும் தமிழ் அறிவாலயத்தினால் வெளியான «தமிழ் அறிவோம்» 2 பாடநூல்கள் (2005). மறுபுறம், தேசிய கற்பித்தல் உதவி மையத்தின் (Nasjonalt læremiddel senter/ National Teaching Aids Center) ஆதரவுடன் Kulturbro பதிப்பகத்தின் வழிநடத்தலில் «தமிழ் 1 மற்றும் தமிழ் 2» பாடநூல்கள் (1995 மற்றும் 1997) ஆகும்.

நோர்வேயில் புலம்பெயர் தமிழ்ச் சிறுவர்கள் தாம் வாழும் சூழலுக்கு அமைய தமிழ்ப் பாடநூல்கள் உருவாவதற்கு முன்னர், தமிழ்மொழி ஆசிரியர்கள், இலங்கை, தமிழ்நாடு மற்றும் சிங்கப்பூரில் வெளியான பல்வேறு தமிழ்ப் பாடநூல்களை அடிப்படையாகக் கொண்டு தமிழ்மொழிக் கற்பித்தலுக்கான பாடத்திட்டங்கள், பயிற்சித் தாள்கள் மற்றும் தமிழ்த் தேர்வுகள் ஆகியவற்றைத் தாமாகவே தயாரித்தனர். 1990 களின் இறுதிப் பகுதி தொடக்கம் தாம் வாழும் நாடுகளில் தமிழ்மொழிப் பாடநூல்கள் தயாரிக்கப்பட்டு, தமிழ்த் தேர்வுகள் அப்பாடநூல்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட பின்னர், அவை பல புலம்பெயர் நாடுகளில் நடைமுறைக்கு வந்தன. 2000 ஆம் ஆண்டுகளில் பாடநூல்களும் தமிழ்த் தேர்வுகளும் ஒரு மையப்படுத்தப்பட்டு சர்வதேச அளவில் தரப்படுத்தப்பட்டன. புலம்பெயர் நாடுகளில் உள்ள பல தமிழ்ப் பள்ளிக்கூடங்கள், அவற்றின் பாடநூலாக்கக் குழுக்கள் மற்றும் தமிழ் ஆசிரியர்களின் ஒத்துழைப்பின் மூலம் பொதுவான சர்வதேச தமிழ் பாடநூல்கள், பாடத்திட்டம் மற்றும் தமிழ்த் தேர்வுகள் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. 24.08.2002 அன்று நோர்வேயில் சர்வதேச தமிழ்மொழிப் பாடநூல்கள் அறிமுகப்படுத்தப்பட்டன[10].

---

[8] (Brønnøysundregistrene, n.a.-c)

[9] "ஈழம்" என்பது முழுத் தீவிற்குமான ஒரு பூர்வீகப் பெயர் ஆகும். அதாவது இன்றைய இலங்கை/ ஸ்ரீலங்கா. "ஈழம்" என்ற சொல் சங்க காலத்தைச் சேர்ந்த தமிழ் இலக்கியங்களில் ஒன்றான «பட்டினபாலை» இல் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த சொல் தமிழ்நாட்டின் திருப்பரங்குன்றம் கல்வெட்டில் உள்ள தமிழ் பிராமி கல்வெட்டுகளிலும், இலங்கையின் பாலி நாளாகமத்திலும் காணப்படுகிறது. (TamilNet, 2008; Veluppillai, 1997)

[10] 24.08.2002 அன்று, முதலாவது சர்வதேச பாடநூல்கள் நோர்வேயில் அறிமுகப்படுத்தப்பட்டன. அவை ITEC எனும் நிறுவனத்தால் உருவாக்கப்பட்டன (Annai Poopathi Tamilsk Kultursenter - Rommen, 2007). பின்னர் தமிழர் கல்வி

இதற்கு அப்பால், 1990 களிலிருந்து சிறுவர் பாடல் ஒலிநாடாக்கள் மற்றும் ஒலிவட்டுகள், சிறுவர் கதைப்புத்தகங்கள், சிறுவர் பாடல் புத்தகங்கள், சிறுவர் எழுத்து விளையாட்டுகள், பிற கற்பித்தல் உபகரணங்கள் நோர்வே வாழ் தமிழ்மொழி ஆசியர்களாலும், ஆர்வலர்களாலும், தமிழ்ப் பள்ளிக்கூடங்களாலும் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. நோர்வேயில் இயங்கிய மற்றும் இயங்கி வரும் தமிழ்மொழிக் கல்விச் சேவைகளின் பட்டியலைப் பார்வையிடவும்.

1990 களில் தேசிய கற்பித்தல் உதவி மையம் (Nasjonalt læremiddel senter/ National Teaching Aids Center), Kulturbro பதிப்பகத்திற்கு, தாய்மொழி கற்பித்தலுக்கான பாடநூல்களை[11] தமிழ் மொழி உட்பட பல்வேறு மொழிகளில் தயாரிக்கும் வேலைத்திட்டத்திற்கு நிதி உதவி வழங்கியது. இவ்வேலைத்திட்டம் நோர்வே பள்ளிக்கூடங்களில் மாணவர்களாக இருந்த சிறுபான்மை மொழி பேசும் சிறுவர்களுக்கான தாய்மொழிக் கல்விக்கான பாடநூல் பற்றாக்குறையை நிவர்த்தி செய்தது. "தமிழ் 1" (1995) மற்றும் "தமிழ் 2" (1997) பாடநூல் உருவாக்கத் திட்டத்தை நோர்வேயிய மற்றும் தமிழ் ஆலோசகர்கள் இணைந்து மேற்கொண்டனர். இதனை பிலோமினம்மா ஜோர்ஜ் எழுதினார். அவர் இத்திட்டத்தின் முக்கியத்துவம் மற்றும் நோக்கம் பற்றி எழுதுகையில், *«தாய்மொழி என்பது வெளி உலகத்துடன் தொடர்பு கொள்ள ஒரு பிள்ளை பயன்படுத்தும் மொழி ஆகும். எனவே அது அவர்களின் அடையாளத்தின் ஒரு முக்கிய பகுதியாகும். இந்த மாணவர் குழுவிற்கான இலக்கு இருமொழி மற்றும் இரு பண்பாட்டுத் திறனை அடைவதே ஆகும். தாய்மொழிக் கல்வி மாணவர்களின் அனைத்து விதமான வளர்ச்சியையும் வலுப்படுத்தவும், மற்றும் மாணவர்களின் அடையாளத்தை உறுதிபடுத்தவும், மற்றும் பள்ளியிலும் சமூகத்திலும் மற்றவர்களுடனான தொடர்பையும் உறுதிப்படுத்தவும் உதவும்.»* 1990 களில் நோர்வேயில் ஈழத்தைச் சேர்ந்த பெற்றோருக்குப் பிறந்து வளர்ந்து வந்த புலம்பெயர்ந்த சிறுவர்கள் மற்றும் நோர்வேயில் பிறந்த சிறுவர்கள் என்று இருவருக்கும் இந்த நூல்கங்கள் வடிவமைக்கப்பட்டன. ஆனால் இன்று நோர்வே மூன்றாம் தலைமுறை தமிழர்கள், மற்றும் ஒரு சில சந்தர்ப்பங்களில், நான்காம் தலைமுறை தமிழர்களையும் கொண்டுள்ளது.

பாரம்பரியமாக தமிழ் எழுத்து அட்டவணையில் உள்ள முதல் உயிர் எழுத்தான «அ» எனும் எழுத்துடன் தமிழ் எழுத்துப் பயிற்சி ஆரம்பித்தது. அதோடு, எழுத்தின் ஒலி உச்சரிப்புக்கு (Phonics) பதிலாக ("அ" மற்றும் "ஆ"), "அனா" மற்றும் "ஆவன்னா" என்று உச்சரித்தார்கள். 1990 களின் முற்பகுதியில், புலம்பெயர் தமிழர் மத்தியில் தமிழ் எழுத்து அறிமுகக் கல்வி ஒரு பேசுபொருளாகி (discourse), எழுத்துப் பயிற்சி மற்றும் எழுத்தின் ஒலி உச்சரிப்பு சீர்திருத்தப்பட்டது.

இந்த மின் நூலின் (e-book) வேலைத்திட்டம் 2020 ஆம் ஆண்டின் ஆரம்பப்குதியில் ஆரம்பிக்கப்பட்டது. இந்த மின் நூல் நோர்வேயில் உள்ள பல்வேறு தமிழ் பள்ளிக்கூடங்கள் மற்றும் தமிழ் சங்கங்களின் இந்நாள் மற்றும் முன்னாள் உறுப்பினர்களின் வாய்மொழி

மேம்பாட்டுப் பேரவை (TEDC) உருவாகி, சர்வதேச பாடநூல்களை வெளியிட்டது. இன்று அனைத்துலக தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை (ICEDT) எனும் நிறுவனமும் சர்வதேச பாடநூல்களை வெளியிட்டு வருகின்றது.

[11] Kulturbro பதிப்பகம் தமிழ், வியட்நாமிய மற்றும் போஸ்னிய / குரோஷியன் / செர்பியன் மொழிகளில் தாய்மொழி பாடநூல்களை வெளியிட்டுள்ளது.

வரலாறு[12] நேர்காணல்கள், மின்னஞ்சல் மற்றும் குறுந்தகவல் தொடர்பாடல்கள், தொலைபேசி தொடர்பாடல்கள், பொதுச் சுவடிகள் (offentlig arkiv), தமிழ் அமைப்புகளின் சுவடிகள் (organisasjonsarkiv) மற்றும் தனிநபர் சுவடிச்சேகரிப்புகள் (personlig arkiv) ஆகியவையின் அடிப்படையில் எழுதப்பட்டுள்ளது.

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு, நோர்வே (Det tamilske samordningsutvalget/ Tamil Coordinating Commitee, TCC Norge) பற்றிய வரலாற்றைக் கூறியமைக்கு இந்நாள் மற்றும் முன்நாள் பொறுப்பாளர்கள், செயற்பாட்டாளர்கள் அனைவருக்கும் நன்றி. «தமிழ் 1 மற்றும் தமிழ் 2» ஆகிய பாடநூல் செயற்திட்டத்திற்கு TCC நோர்வேயால் கொடுக்கப்பட்ட பின்னணி ஆதரவு பலர் அறிந்திடாத வரலாற்றுக் குறிப்பாகும்.

இக்கட்டுரையின் நோர்வேயிய மொழி வடிவத்தை சரிபார்த்த அன்னே-லிஸ் ஒவ்ரபொத்தன் (Anne-Lis Øvrebotten), ரூன ஒவ்ரபொத்தன் (Rune Øvrebotten) மற்றும் தமிழ் வடிவத்தை சரிபார்த்த சாந்தி குமரேந்திரன் ஆகியோருக்கும் நன்றி.

பொறுப்புத் துறப்பு:
தமிழ்ச் சமூகத்தில் ஆவணங்களின் பற்றாக்குறை, சிதறடிக்கப்பட்ட ஆவணங்கள் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட அணுக்கத்தைக் கொண்ட ஆவணங்கள் உள்ளன. இதனால் வாய்மொழி வரலாற்று நேர்காணல்களில் வெளிவரும் வரலாற்றுத் தகவல்களை சரிபார்க்கக்கூடிய ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதில் சவால் உள்ளது.
இச்சூழ்நிலையில், புலம்பெயர் தமிழரின் வரலாற்றை எழுதுவது ஒரு மாற்றம் பெறும் செயல்முறையாக (dynamic process) இருக்கும். இச்செயல்முறை காலப்போக்கில் ஒரு வரலாற்று எழுத்து வடித்தைப் புதுப்பித்து வளர்த்தெடுக்க உந்துகோலாக அமையும். எனவே, இந்த மின் நூலில் உள்ள தகவல்களில் திருத்தம் தேவைப்பட்டால், சரிபார்க்கக்கூடிய ஆதாரங்களுடன் கருத்துக்களை வழங்கமாறு பொதுமக்கள் வரவேற்கப்படுகின்றனர்.

[12] வாய்மொழி வரலாறு என்பது வாய்மொழிப் பாரம்பரியமாக இருக்கும் அறிவை ஒரு தலைமுறையிலிருந்து இன்னொரு தலைமுறைக்கு கடத்தப் பதிவு செய்து ஆவணப்படுத்தும் ஒரு செயல்முறை ஆகும். (Kumarendiran, 2020a)



Philominammah som ung lærerinne på 1960-tallet.

*படம்: 1960 களில் பிலோமினம்மா அவர்கள் இளம் ஆசிரியராக. (*Pugh. C., D., 2005*)*

நோர்வேயில் தமிழ் பாடநூல் திட்டம்

1990 களில் நோர்வேயியப் பாடத்திட்டம்

1980 களில் தாய்மொழிக் கல்வி ஒரு புதிய கருப்பொருளாக நோர்வேயில் உணரப்பட்டது. M74 என்று அழைக்கப்பட்ட பாடத்திட்டம் M87 என திருத்தியமைக்கப்பட்டு 1987 ஆம் ஆண்டு நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது. தாய்மொழிக் கல்வியை தனது கல்வி நிரலில் முக்கியத்துவப்படுத்திய முதல் நோர்வேயியப் பாடத்திட்டம் இதுவாகும். M87 நோர்வேயிய நகராட்சிகளிடம் மேலதிகப் பொறுப்பைக் கொடுத்தது. இப்பாடத்திட்டத்தின் 6ம் அத்தியாயமான «மொழியியல் சிறுபான்மையினர்» இன் அடிப்படையில் தாய்மொழியின் பொருள் இவ்வாறு வரையறுக்கப்படுகிறது: «ஒரு குழந்தையின் வளர்ச்சியில் மொழி முக்கிய பங்கு வகிக்கின்றது. நன்கு மேம்படுத்தப்பட்ட தாய்மொழி அறிவு என்பது, பேச்சு மற்றும் சிந்தனை மொழி, வீட்டுப் பாவனை மொழி அல்லது முதல் மொழி என்று அழைக்கப்படலாம். இது ஒருவரின் ஆளுமை வளர்ச்சிக்கு (personality development) மிகவும் முக்கியமானது.»[13] இது பின்வரும் விடயம் மூலம் கவனம் செலுத்தப்பட்டது: «ஒரு பிள்ளை தனது அன்றாட சூழலில் பயன்படுத்தும் மொழியைப் பற்றிய அறிவைப் பாதுகாத்தல். இது அந்தப் பிள்ளையின் அறிவு, சமூக மற்றும் உணர்வுசார் பகுதிகளின் வளர்ச்சியை மேம்படுத்த உதவும். இதனால் ஒரு பிள்ளை தனது பெற்றோரின் பண்பாட்டுப் பின்னணியுடன் வாழ்வதற்கும், ஒன்றுபட்டு வளர்வதற்கும் வாய்ப்பைப் பெற்றுக் கொள்ளும்.» இந்நாட்டு அரசு, ஆரம்பப் பள்ளிப் பிள்ளைகளிற்கு தங்களது தாய்மொழியைப் பேணிப் பாதுகாக்கவும், வளர்க்கவும் வாய்ப்பளிப்பது முக்கியம் என்று நம்பினர். ஏனெனில் «நன்கு மேம்படுத்தப்பட்ட தாய்மொழி அறிவு ஆரம்ப வாசிப்புத் திறனையும் பிற மொழிகளைக் கற்றுக் கொள்வதையும் இலகு படுத்தும். அறிவைக் கையகப்படுத்த மற்றும் சிக்கல் தீர்க்கும் திறனை மேம்படுத்தும் வகையில் செயற்படும் ஒரு தாய்மொழி, பிற மொழிகளில் இதே போன்ற திறன்களை வளர்க்க உதவுகிறது.» அதாவது, இருமொழிக் கல்வியியலில் (bilingualism) கவனம் செலுத்தப்பட்டது. மேலும் தாய்மொழிக் கல்வி நோர்வேயிய மொழிக் கல்வி அறிவுடன் சமத்துவப்படுத்தப்பட்டிருந்தது. ஆனால் 1990 களின் இறுதியில் இருந்து, தாய்மொழியின் அர்த்தமும் செயற்பாடும் படிப்படியாக நோர்வே மொழியைக் கற்பதற்கான ஒரு கருவி மொழியாக மாற்றப்பட்டது.

பேர்கனில் தாய்மொழிக் கல்வி

நோர்வே பள்ளிகளில் தமிழ்ப் பிள்ளைகளின் எண்ணிக்கை 1980 களின் இறுதியில் அதிகரித்தது. 1990 ஆம் ஆண்டில், பேர்கன் நகராட்சியில் தாய்மொழிக் கல்வியை நிர்வகிக்க "மொழியியல் சிறுபான்மையினருக்கான தாய்மொழிக் கல்விக்கான நிர்வாகம்" («Administrasjon for morsmålsundervisning for språklige minoriteter») நிறுவப்பட்டது. இது 2005 வரை பேர்கன் நகராட்சியில் தாய்மொழி கற்பிப்பதற்கான நிர்வாக, நிறுவன மற்றும் கல்விப் பொறுப்பைக் கொண்டிருந்தது. அதன்பிறகு, இது ஒரு தனி நிர்வாகமாக நிறுவப்பட்டது, மேலும் இத்துறை "சிறுவர் பள்ளி மற்றும் மழலையர் பராமரிப்புப் பூங்காவிற்கான பாடத் துறையில்" («Fagavdeling for skole og barnehage») இணைக்கப்பட்டது. [14]

[13] தமிழாக்கம். Kirke- og Undervisningsdepartementet (1987, p. 37)

[14] "மொழியியல் சிறுபான்மையினருக்கான தாய்மொழி கல்விக்கான நிர்வாகம்" ஆவணம் (1990-2005), (Arkiv etter Administrasjon for morsmålsundervisning for språklige minoriteter), பேர்கன் நகர ஆவணகம்.

அந்த நேரத்தில், நகராட்சிப் பள்ளிகளில் தாய்மொழி ஆசிரியர்கள் தமிழில் தாய்மொழி கற்பிப்பதற்காக இலங்கை மற்றும் இந்தியாவிலிருந்து பாடநூல்களைப் பயன்படுத்தினர். இருப்பினும், அவர்கள் அந்த நூல்களில் இருந்த உள்ளடக்கத்தை நோர்வேயில் வளர்ந்த பிள்ளைகளுக்குப் பொருத்தமாக மாற்றியமைக்க வேண்டியிருந்தது.

M87 பாடத்திட்டம் மற்றும் தாய்மொழிப் பாடநூல்களின் பற்றாக்குறை ஆகியவற்றின் அடிப்படையில், ஒசுலோவில் உள்ள Kulturbro (குல்டூர்புறு) பதிப்பகம், தமிழ் உட்பட பல்வேறு மொழிகளில் தாய்மொழிப் பாடநூல்களைத் தயாரிக்கும் திட்டத்தை முன்னெடுத்தது. அத்திட்டத்தில் தமிழ்ப்பாடநூல்களைத் தயாரிப்பதற்கு ஒரு பொறுப்பாளரைத் தேடியது. நாடு முழுவதும் இருந்த நகராட்சிகளில் பணியாற்றிய தாய்மொழிப் பயிற்சிக்கான பொறுப்பாளர்களுக்கு இந்தத் தேவை தெரியப்படுத்தப்பட்டது. பேர்கனில் உள்ள நீகோர்ட் (Nygård) பள்ளியில் பணியாற்றிய தாய்மொழிக் கல்விப் பொறுப்பாளர் பிலோமினம்மா ஜோர்ஜ் இப்பாடநூல் திட்டத்தின் பொறுப்பாளராகப் பரிந்துரைக்கப்பட்டார், என்று ஜோர்ஜ் மற்றும் கரோலின் கூறுகின்றனர் [15].

பிலோமினம்மா ஜோர்ஜ் (1941-2004)

1957 ஆம் ஆண்டு: பிலோமினம்மா ஜோர்ஜ் தனது 16 வயது தொடக்கம் ஈழத்தில் பல்வேறு இடங்களில் ஆரம்ப மற்றும் இடைநிலைப் பள்ளியில் (barn og ungdomskole) பணியாற்றியுள்ளார். 1986 வரை மன்னார், கிளிநொச்சி, அல்வாய், சக்கோட்டை, வல்வெட்டித்துறை, புலோலி ஆகிய இடங்களில் பணிபுரிந்தார். 1987 இல் வடமராட்சியைக் கைப்பற்றும் நோக்கோடு நடைபெற்ற (யாழ்ப்பாண மாவட்டம்) "ஒப்பரேஷன் லிபரேஷன்" («Operation Liberation»[16] என்ற சிங்கள படையெடுப்பின் போது ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்தார். இது வட இலங்கையில் உள்ள யாழ்ப்பாணக் குடாநாடு மீதான சிங்கள இராணுவத்தின் இராணுவத் தாக்குதல் ஆகும். அரசியல் அச்சுறுத்தல்கள், அரச வன்முறை மற்றும் ஆயுதப் போர் காரணமாக, ஐந்து மகள்கள் மற்றும் ஒரு வளர்ப்பு மகனின் தாயுமான பிலோமினம்மா, தங்கள் தாயகத்தை விட்டு வெளியேற நேர்ந்தது. 1987 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் பிலோமினம்மாவின் கணவரான ஜோர்ஜ் தோமாய் மதுதீனு மற்றும் அவர்களது மூத்த மகளும் நோர்வேக்கு புலம்பெயர்ந்தனர். இதனைத் தொடர்ந்து ஓகஸ்ட் 1987 பிலோமினம்மா தனது இளைய மகன், மகளுடன் நோர்வேயை வந்தடைந்தார்.

[15] ஜோர்ஜ் தோமாய் மதுதீனு பிலோமினம்மாவின் கணவர் ஆவார். கரோலின் தேவநாதன் அவர்களின் மகள். அவர் மே மாதம் 1983 ஆம் ஆண்டு நோர்வேக்கு புலம்பெயர்ந்தார்.

[16] Balasingham (2002, p. 166)

படம்: பிலோமினம்மா ஜோர்ஜ் குடும்பம் (1984). வரைகலை மூலம் கரோலில் இப்பத்தில் இணைக்கப்பட்டார் (2011). இடது பக்கத்திருந்து: ஜெரின் கீசறூட் ஜோர்ஜ், ஜோர்ஜ் தொம்மை மடுத்தீனு, யூஜின்மேரி நரேஸ்குமார், ராஜ்குமார் ஜோர்ஜ், ஜக்குலின்மேரி எதிர்மனசிங்கம், கெலன்மேரி அன்ரன் உதயகுமார், கரோலின் தேவநாதன், பிலோமினம்மா ஜோர்ஜ்.

படம்: புனித வளன் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி (St. Joseph Teacher Training College). இன்று இன்று கிருஸ்தவ மதக் கல்லூரியாக உள்ளது (St.Francis Xavier´s Seminary) (28.10.2020)



படம்: மன்னார், கிளிநொச்சி, அல்வாய், சக்கோட்டை, வல்வெட்டித்துறை, புலோலி. [17]. *இதனுடன் கொழும்புத்துறையில் உள்ள புனித வளன் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி* [18]. *அங்கு பிலோமினம்மா 1960-1961 ஆண்டுகளில் ஆசிரியராகப் பட்டம் பெற்றார்* [19].

1988 இல் பேர்கனில் உள்ள நீகோர்ட் (Nygård) பள்ளியில் ஒரு தமிழ் தாய்மொழி ஆசிரியர் பணியைப் பெற்றார். அத்தோடு, பேர்கன் தமிழ்ச் சிறுவர் பாடசாலையிலும் தமிழ்த்தாய்மொழி ஆசிரியராகத் தன்னார்வத் தொண்டு ஆற்றினார்.

[17] இடப் பெயர்களின் சொற்பிறப்பியலை ஆங்கிலத்தில் அறிந்து கொள்ள TamilNet (2017) ஐப் பார்வையிடவும்.

[18] நாகரத்னத்தின் கூற்றுப்படி, «புனித வளன் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி» («St. Joseph Teacher Training College») என்பது கொழும்புத்துறையில் இருந்த ஒரு கிறிஸ்தவ மிஷனரி ஆசிரியர் பயிற்சி கல்லூரி ஆகும். இக்கல்லூரி பின்னர் இலங்கை அரசினால் பொறுப்பெடுத்தது. அதன்பின் "கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி" என்று அழைக்கப்பட்டது. இலங்கை வாழ் தமிழர் ஒருவர் கொழும்புத்துறையில் ஒரு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி இருந்ததை உறுதிப்படுத்துகிறார். ஆனால் அது இப்போது ஒரு மதப் பள்ளிக்கூடமாக உள்ளது (ஆங்கிலத்தில் "seminary" என்று அழைப்பர்).

[19] Aiyathurai (2006, p. 10); Pugh. C. (2005?, p. 34)

பிலோமினம்மாவின் நினைவாக 2006 ம் ஆண்டு இலண்டனில் (ஐக்கியராச்சியம்) உள்ள ஒரு தமிழ் அச்சகத்தில் அச்சிடப்பட்டு 26.02.2006 ம் ஆண்டு பாரிசில் (பிரான்சு) ஆழிப்பேரலையின் 2ம் ஆண்டு நினைவாக "நெஞ்சில் வாழும் பூக்கள்" நினைவு மலரும் இறுவெட்டும் "பிரியாலயம்" துரைஸ் அவர்களால் வெளியிடப்பட்டது.

ஒக்டோபர் 1989 இல் பிலோமினம்மா "புலம்பெயர்ந்தோர் மற்றும் அகதிகளுக்கான நோர்வேயிய மொழிக் கல்வி" «Norsk for innvandrere og flyktninger»[20] முடித்தார். 1992 இல் நோர்வே மொழியில் வேற்றின மொழிபேசுவோர் (norsk for fremmedspråklige) தேர்வில் உயர் மட்டத்தில் தேர்ச்சி பெற்றார். இத்தேர்வில் சித்தியடைந்தவேளை அவரின் வயது 51 மற்றும் எட்டுப் பேரக்குழந்தைகளிற்குப் பாட்டியுமாவார்.

படம்: பிலோமினம்மா மற்றும் அவரது கணவர் ஜோரஜ் முல்லைத்தீவில் வசித்த இடம் சுனாமிக்குப் பின்னர் 2005.

பின்னர் 2002 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட அன்னை பூபதி தமிழ் கலைக் கூடத்தின் பேர்கன் கிளையிலும் தாய்மொழி ஆசிரியராகப் பணி ஆற்றினார். பேர்கன் நகராட்சியில் இருந்த பிற நகராட்சி ஆரம்ப மற்றும் இடைநிலைப் பள்ளிகளிலும் தனது தாய்மொழி ஆசிரியர் பணியை ஆற்றி, ஈழத்திற்கு மீளக் குடியேறுவதென்ற முடிவின் காரணமாக டிசம்பர் 2003 இல் தனது ஆசிரியர் பணியை நோர்வேயில் முடிவிற்கு கொண்டு வந்தார். பிலோமினம்மாவும் அவரது கணவரும் மே 2004 இல் வன்னியில்[21] இருந்த காந்தரூபன் அறிவுச்சோலையில் [22] தமிழ் மற்றும் ஆங்கிலக் கல்வி ஆசிரியராகப்[23]

---

[20] Pugh. C. (2005?, p. 101) David C. Pugh (டேவிட் சி. பக்) ஒரு அரசு சான்றளிக்கப்பட்ட மொழிபெயர்ப்பாளராக நோர்வேயில் பணியாற்றினார். அவர் இங்கிலாந்தைச் சேர்ந்தவர் என்று அறியப்படுகிறது. பிலோமினம்மாவின் இழப்பிற்குப் பின் அவரைப் பற்றிய ஒரு எழுத்துப் படைப்பை உருவாக்கினார். இப்படைப்பை ஒரு குறுவட்டில் சேமிக்கப்பட்ட PDF ஆக ஜோர்ஜ் குடுப்பத்தினரிடம் கையளித்தார். அது அவரது 1ஆம் ஆண்டு நினைவாக ஏப்ரல் மாதம் 2005 ஆம் ஆண்டு பேர்கனில் «நாட்டுப்பற்றாளர் தினம்» அன்று வெளியிடப்பட்டது. «இது ஒரு அரசியல் அறிவியல் படைப்பு அல்ல, மாறாக அரசியல் ரீதியாக ஈடுபட்ட ஒரு தமிழ்க் குடும்பத்தின் வரலாற்றுச் சுற்றுப்பயணம்.» (தமிழாக்கம்) Pugh. C. (2005?, p. 3)

[21] ஈழத்தின் வட மாகாண நிலப்பரப்பு. வன்னி எனும் சொல்லின் சொற்பிறப்பியல் (TamilNet, 2013)

[22] "காந்தரூபன் அறிவுச்சோலை" ஈழப் போரில் பெற்றோரை இழந்த சிறுவர்களுக்கான சிறுவர் இல்லமாக இருந்தது. அதேபோல், "செஞ்சோலை சிறுவர் இல்லம்" சிறுமிகளுக்கான சிறுவர் இல்லமாக இருந்தது.

[23] Aiyathurai (2006, pp. 24-26)

பணியாற்றுவதற்காக மீண்டும் ஈழத்திற்கு குடிபெயர்ந்தனர். டிசம்பர் 2004 சுனாமியில் இறந்த அவரை, அவரது தாய் நாடான தமிழீழத்தில் அடக்கம் செய்தனர்.

படம்: நாட்டுப்பற்றாளர் பிலோமினம்மா ஜோரஜ் புதுக்குடியிருப்பு, தமிழீழத்தில் 30.12.2004 அன்று அடக்கம் செய்யப்பட்டார்.

பிலோமினம்மா புலத்திலும் (Tamil diaspora)[24] தாயகத்திலும் ஆற்றிய சமூகப் பணியை மதிப்பளிக்கும் முகமாக தமிழீழ நிர்வாகச் செயல்முறை (bureaucratic) மூலம் அவருக்கு "நாட்டுப்பற்றாளர்" [25] (Folkehelt/ Patriot)[26] என்று மதிப்பளிக்கப்பட்டார்[27].

---

[24] ««*Diaspora*» என்ற சொல் கிரேக்க சொல்லான «*diaspeirein*» எனும் சொல்லிருந்து உருவானது. அது கலைத்தல் அல்லது சிதறல் என்று பொருள் படும். ஒரு டியாஸ்போரா (diaspora - புலம்பெயர்வு) என்பது ஒரு பூர்வீக நாட்டிலிருந்து அல்லது தேசியத்திலிருந்து வந்த ஒரு இன மக்களைக் குறிக்கின்றது. அல்லது அவர்களது மூதாதையர்கள் அங்கிருந்து வந்தவர்களாக இருப்பார்கள். அவர்கள் ஒரு பொதுவான பூர்வீக மொழி, கலை, பண்பாடு, வரலாறு, நாகரீகம் கொண்டவர்களாக இருப்பார்கள். ஆனால் அவர்கள் இப்போது உலகின் பல்வேறு பகுதிகளில் வாழ்பவராக இருப்பார்கள். உலகளாவிய தமிழர் புலம்பெயர்வு பல ஆயிரம் ஆண்டுகளாக நிகழ்ந்திருந்தாலும், 1980 களில் ஈழத்தில் வெடித்த ஆயுதப் போராட்டம் காரணமாக ஈழத்திலிருந்து உலகளவில் புலம்பெயர்ந்த தமிழர்களால் «தமிழ் டியாஸ்போரா» (Tamil Diaspora) என்ற பதம் உருவானது. ஆனால் இந்தப் பதம் பரந்துபட்ட அளவில் தமிழகம் மற்றும் ஈழத்தைப் பூர்வீகமாகக் கொண்ட தமிழர்களை உள்ளடக்கும்.

புலம்பெயர்ந்தோரின் (diaspora) பிற எடுத்துக்காட்டுகள் யூதப் புலம்பெயர்வு (Jews diaspora) மற்றும் ஆப்பிரிக்கப் புலம்பெயர்வு (African diaspora).» (Kumarendiran, 2020b)

[25] (Aiyathurai, 2006; Geroge Family, 2014; Vijasan, 27.02.2016)

[26] «Folkehelt» என்பது நாட்டுப்பற்றாளர் எனும் சொல்லின் நோர்வேயிய மொழிபெயர்ப்பு. இது நோர்வேயிய அரச அங்கீகாரம் பெற்ற மொழிபெயர்ப்பாளரான David Pugh C. (டேவிட் பூ சி.) என்பவரின் மொழிபெயர்ப்பாகும். (2005?, pp. 166-167). இதனை «Patriot» என்று ஆங்கிலத்தில் குறிப்பிடலாம்.

[27] «நாட்டுப்பற்றாளர் என்று ஒருவரை அறிவிப்பதற்கான வழக்கமான நடைமுறை பின்வருமாறு: முதலில் குறித்த நவரின் வாழ்க்கை ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு, பின்னர் இரண்டு முக்கிய நபர்களிடமிருந்து ஒரு பரிந்துரையைப் பெற்றிருக்க வேண்டும் (இந்தச் சந்தர்ப்பத்தில் காந்தரூபன் அறிவுச்சோலையின் தலைமை). பின்னர் இந்த விடயம் (case) மாவீரர் பணிமனையின் அலுவலகத்திற்குச் செல்லும். அதன் பின்னர் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனின் அலுவலகத்திற்குச் சென்றடையும். இறுதியாக

படம்: நாட்டுப்பற்றாளர் பிலோமினம்மா ஜோரஜ் ஓராண்டு நினைவு, கோப்பாவில், தமிழீழம் (2005). படம் நினைவு மலரிலிருந்து எடுக்கப்பட்டது (2006).

«தமிழ் 1» தமிழ் பாடநூல்

இந்தப் பாடநூல்த் திட்டப் பொறுப்பாளர் ஒசுலோவிலிருந்து பேர்கனுக்கு வந்து, நீகோர்ட் பள்ளியில் பிலோமின்னம்மாவை சந்தித்தார். 1 முதல் 6 ஆம் வகுப்பு வரை தமிழ் பாடநூல்களை உருவாக்கும் கோரிக்கையை வழங்கினார். 6 வகுப்புகளுக்குமான நூல்களை உருவாக்க ஒரு காலவரை எல்லையையும் வழங்கப்பட்டது. - என்ற தகவலை அவரது கணவர் ஜோரஜ் கூறுகிறார்.

1990 களின் முற்பகுதியில் பிலோமினம்மா பாடநூல் திட்டப் பணிகளை ஆரம்பித்தார். அதோடு பேர்கன் நகராட்சியில் ஆலோசனை வழிகாட்டுதல் சேவையில் நோர்வேயிய மொழியை இரண்டாம் மொழியாகக் கற்கும் கல்வியின் (norsk-2) ஆலோசகராக பணியாற்றிய அன்னே-லிஸ் ஒவ்ரபொத்தனை (Anne-Lis Øvrebotten)[28] தொடர்பு கொண்டார். அவருக்கு

தேசியத்தலைவர் பிரபாகரன் அவர்கள் இறுதி முடிவு எடுப்பதற்கு முன்பு தமிழ்செல்வன் ஒரு பரிந்துரை அளிப்பார். ஒரு வழமையான நிர்வாகச் செயல்முறையில் (bureaucratic system), இதுபோன்ற ஒரு செயல்முறை இரண்டு வருடங்கள் எடுத்திருக்கலாம். ஏனெனில், தனிப்பட்ட பணியாளரின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துவதற்காக முடிந்தவரை ஒவ்வொரு விடயத்தையும் மேசையில் நீண்ட காலத்திற்கு விட்டுவிடுவார்கள். ஆனால் புலிகள் சில நாட்களில் அதைச் செயலாக்குவார்கள். இந்தக் குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில், இவ்விடயம் தனிச்சிறப்பாக உடனடி செயலாக்கத்திற்கு உள்ளாக்கப்பட்டு, தேசியத்தலைவரிடமிருந்து பதில் ஆறு மணி நேரத்தில் வந்தது.» (தமிழாக்கம்) (Pugh. C., 2005?, p. 167)

[28] Anne-Lis Øvrebotten இப்போது பேர்கனில் ஒரு ஓய்வுபெற்ற ஆசிரியராக உள்ளார். அவர் புலம்பெயர்வு கற்பித்தலில் (migrasjonspedagogikk) எனும் சிறப்புத் துறையுடன் ஒரு பயிற்சி பெற்ற ஆசிரியர் ஆவார். அவர் 1969 - 2010 வரை ஆசிரியராகவும், 1989 - 1993 வரை பேர்கன் நகராட்சியில் நோர்வே -2 ஆலோசகராகவும்

நீகோர்ட் பள்ளியில் தாய்மொழி கற்பிப்பதற்கான நிர்வாகத்துடன் சேர்ந்து ஒரு அலுவலகம் இருந்தது. இருவரும் இணைந்து பாடப்புத்தகங்களை உருவாக்க பேர்கனில் ஒரு குழுவாக இயங்கினர். பிலோமினம்மா தமிழ்ப் பாடநூல்களின் உள்ளடக்கத்தை எழுதினார். அதே நேரத்தில் அந்த உள்ளடக்கம் நோர்வே பாடத்திட்டத்துடன் இணையாக இருக்கின்றதா என்பதை அன்னே-லிஸ் உறுதிப்படுத்தினார். அன்னே-லிஸுக்கு இது ஒரு சுலபமான காரியமாக இருக்கவில்லை. ஏனென்றால் உள்ளடக்கத்தைப் பற்றிய அவரது புரிதல் பிலோமினம்மா கூறியதில் தங்கி இருந்தது. எழுதப்பட்டவற்றில் இருந்த பண்பாட்டுச் சூழலையும் சிந்தனையையும் புரிந்துகொள்வது அவருக்கு எளிதான காரியமாக இருக்கவில்லை. மொழியறிவு காரணமாக, அன்னே-லிஸ் மற்றும் பிலோமினம்மா ஆகிய இருவருக்கும் பண்பாட்டு வேறுபாடுகள் மற்றும் சிந்தனை வழிகளை ஒருவருக்கு ஒருவர் விளக்கிப் புரிந்துகொள்வது எளிதாக இருக்கவில்லை. ஆனால் பிலோமினம்மா கருத்துக்களைக் கேட்பதையும் உள்வாங்கிக் கொள்வதையும் நன்றாகவே கையாள்ந்தார். மேலும் பொருத்தமான மாற்றங்கள் மற்றும் திருத்தங்களையும் முன்வைத்தார் என்று அன்னே-லிஸ் கூறுகிறார்.

கணினியில் தமிழ்

பள்ளிகளில் உள்ள தமிழ் மாணவர்களின் தமிழ் மொழித் திறன்களைப் பற்றிய புரிதலை அடிப்படையாகக் கொண்டிருந்தார். “அவர் சொந்தமாக எழுதினார். அவர் சொந்தமாக எழுதுவார். கற்பித்தல் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. ஆனால் அவர் எழுதியவற்றைப் பற்றி என்னிடம் பேசிக் கொள்வார்", என்று பிலோமினம்மா இத்திட்டத்தில் பணிபுரிந்த கால நினைவை ஜோர்ஜ் கூறுகின்றார். அவர் பாடநூலின் உள்ளடக்க உருவாக்கத்தில் பங்கேற்காவிடினும் தனது வாழ்க்கைத் துணைவி கையால் எழுதியவற்றை கணினிமயமாக்க உதவினார். 1990 களில், ஒரு வீட்டில் ஒரு கணினியைப் பார்ப்பது அரிது. இருப்பினும் இந்தப் பாடநூல் திட்டத்திற்கு பங்களிக்க ஜோர்ஜ் ஒரு PC[29] யை வாங்கினார். அந்த நேரத்தில், ஒரு கணினியைக் கையாள ஜோர்ஜிக்கு உதவி தேவைப்பட்டது. அப்போது பேர்கனில் உள்ள தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவில் (TCC) அக்காலப்பகுதியில் பணியாற்றியப் பொறுப்பாளர், ஜெயச்சந்திரன் கோபினாத் என்ற தமிழ் மாணவரை கணினியில் தமிழ் எழுதுதல் குறித்து உதவ ஜோர்ஜ் குடும்பத்தினருக்கு அறிமுகப்படுத்தினார்.

1980 களின் பிற்பகுதியில் ஒரு அமெரிக்க நிறுவனமான, Ecological Linguistics, பல மொழிகளுக்கு பிட்மேப் (bitmap) எழுத்தை உருவாக்கியது. அதே நிறுவனத்தால் தமிழுக்கு வெளியிட்ட ஒரு Bitmap script "மெட்ராஸ்" (Medras) ஆகும். ஏப்ரல் 1990 இல் "சுதந்திரதாகம்"[30] இதழின் பக்கங்களிற்கான body text ஐ தட்டச்சு செய்ய பயன்படுத்தப்பட்ட முதல் கணினி எழுத்துரு இதுவாகும், என்று ஜெயச்சந்திரன் கூறுகிறார். நோர்வேயில் தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட TCC இன் முதல் சஞ்சிகை இதுவாகும், என்று ஜெயச்சந்திரன் கூறுகிறார்.

பணியாற்றியுள்ளார். இந்த ஆண்டுகளில், அவர் பேர்கன் நகராட்சியில் தாய்மொழி நிர்வாகத்துடன் (morsmålsadministrasjonen) நெருங்கிய ஒத்துழைப்பைக் கொண்டிருந்தார்.

[29] Pugh. C. (2005?, p. 159)

[30] ஓகஸ்ட் 1989 முதல் "சுதந்திரதாகம்" மேடை நிகழ்வை ஒட்டி TCC வெளியிட்ட ஒரு அரசியல் சஞ்சிகையே "சுதந்திரதாகம்" ஆகும். இது ஆண்டுக்கு இரண்டு முறை வெளியிடப்பட்டது. ஒன்று ஓகஸ்ட் மாதம் ஒசுலோவிலும் மற்றொன்று ஏப்ரல் மாதம் பேர்கனிலும் வெளியிடப்பட்டது. இதுவரை "சுதந்திரதாகம்" சஞ்சிகை 1989 முதல் 1990 கள் வரை வெளிவந்ததாக அறியப்படுகின்றது. 1980 களின் பிற்பகுதியிலிருந்து 1990 களின் முற்பகுதி வரை அதே பெயரில் செய்திமடல்கள் தமிழர் நாலன்புரி மன்றம், ஒசுலோ மற்றும் உதயம், பேர்கன் ஆகிய இரு அமைப்புகளும் வெளியிட்டன. செய்திமடல் தாயக வாழ் ஈழத் தமிழர்களைப் பற்றிய செய்திக் கட்டுரைகளின் நகல் தொகுப்பாக வெளிவந்தன. (Kumarendiran, 2020c)

"சுதந்திரதாகம்" சஞ்சிகையின் முதற்பதிப்பு இதற்கு முந்தைய ஆண்டு தமிழ்நாட்டில் தட்டச்சு செய்யப்பட்டு நோர்வேயில் அச்சிடப்பட்டதாக வர்மன் மற்றும் மாறன்[31] கூறுகின்றனர். இது முதலில் தமிழகத்தில் அச்சிடத்திட்டமிடப்பட்டது. ஆனால் நடைமுறை இலகுவிற்காக (logistics) இச்சஞ்சிகையின் பக்கங்களை ஒரு «film» வடிவில் பதிந்து, அதனை நோர்வேயில் அச்சிடுமாறு தமிழகத்தில் வடிவமைப்பை உருவாக்கியவர் பரிந்துரைத்ததாக வர்மன் [32] கூறுகிறார்.

"சுதந்திரதாகம்" (1990) சஞ்சிகையில் தமிழ் எழுத்துருக்களைப் பயன்படுத்த ஒரு மேகிண்டோஷ் எஸ்.இ (Macintosh SE) கணினி இயந்திரத்தை ஜெயச்சந்திரன் பயன்படுத்தினார். இக்காலத்தில் பேர்கன் TCC ஒருங்கிணைப்பாளராக இருந்தவர் ஜெயச்சந்திரனை ஜோர்ஜ் குடும்பத்திற்கு தமிழ் தட்டச்சு செய்வதற்கான உதவியை வழங்க அறிமுகப்படுத்தினார். ஆனால், சிறுவர்களுக்கான நூல்களிற்கு, "மெட்ராஸ்" Bitmap எழுத்துரு பொருத்தமாக இருக்கவில்லை. எனவே, கனடாவில் அறிமுகமானவரிடமிருந்து ஜெயச்சந்திரன் ஒரு postscript எழுத்துருவைப் பெற்றுக் கொண்டார். அதுவே "சரஸ்வதி" அகும். இதை அவர் "மெட்ராஸ்" இற்கு பதிலாக பயன்படுத்தினார். "Bitmap" என்பது Pixel அடிப்படையிலான எழுத்துரு ஆகும். இதனால் ஒரு எழுத்தின் விளிம்புகள் மற்றும் வளைவுகள் சதுரம் சதுரமாகக் காட்டும். இதற்கு மாறாக, "Postscript" என்பது vector அடிப்படையிலான எழுத்துரு. இது ஒரு எழுத்தின் விளிம்புகள் மற்றும் வளைவுகளை வளைவு நெழிவுடன் காட்டும். "சரஸ்வதி" ஒரு நல்ல எழுத்துரு அல்ல, ஆனால் கணினியில் தமிழ் எழுதுவதற்கான ஆரம்பக் கட்டமாகும்.

ஜோர்ஜ் தனது கணினியில் (PC) "சரஸ்வதி" எழுத்துருவைப் பெற்றுக் கொண்டு, கணினியில் தமிழ் தட்டச்சு செய்யக் கற்றுக்கொண்டார் [33].
அதே காலகட்டத்தில், தமிழர்கள் உலகெங்கிலும் பல நாடுகளுக்கு புலம்பெயர்ந்தனர். கிளிநொச்சியில் இருந்த ஒரு பள்ளியில் பிலோமினம்மாவின் முன்னாள் மாணவர்களாக இருந்தவர்கள் பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்திற்குக் குடியேறினார்கள். அவர்களின் உதவியுடன், ஜோர்ஜ் தனது கணினியில் "Page Maker" என்ற வடிவமைப்பு நிரலைப் பெற்றார். இவ்வாறு, அவர் தமிழில் தட்டச்சு செய்து பாடநூலை A4 பக்கங்களாக வடிவமைத்தார்.

பாடநூல் திட்டத்தை கைவிடுவதா?

பின்னர் ஜோர்ஜ் தம்பதியினருக்கு தாய், தந்தை, சகோதரி, சகோதரன் போன்றவற்றிற்கான விளக்கப்படங்கள் தேவைப்பட்டன. எனவே வரையக்கூடிய ஒரு தமிழ் இளைஞரிடம்

---

[31] யூலை 1983 ஆம் ஆண்டு தமிழர்கள் மீதான படுகொலையைத் தொடர்ந்து (கறுப்பு யூலை 1983) (PEARL, n.a.), மாறன் தனது 21 வயதில் தனது தாய்நாட்டை விட்டு புலம்பெயர வேண்டிய கட்டாயம் உருவானது. அவர் செப்டம்பர் 1983 ஆம் ஆண்டு ஒசுலோவில் உள்ள Rønningen Folkehøgskole இல் ஒரு மாணவராக நோர்வேக்கு புலம்பெயர்ந்தார். "சுதந்திரதாகம்" சஞ்சிகையின் ஆசிரியர் குழுப் பணிகளிலும் மற்றும் "சுதந்திரதாகம்" செய்திமடல் பணிகளிலும் பணியாற்றிய பலரில் இவரும் ஒருவர் ஆவார்.
[32] வர்மன் மியூசன் (Mysen) எனும் இடத்தில் Bondelagets Folkehøgskole இல் ஒரு மாணவராக செப்டம்பர் மாதம் 1984 ஆம் ஆண்டு நோர்வேக்கு புலம்பெயர்ந்தார். "சுதந்திரதாகம்" சஞ்சிகைக்காகத் (ஓகஸ்ட் 1989) திட்டமிடப்பட்ட உள்ளடக்கத்தின் வடிவமைப்பு தமிழ்நாட்டில் செய்யப்பட்டது. அப்பணியை முன்னெடுக்க தமிழ்நாட்டிற்குப் பயணம் செய்த இருவரில் இவர் ஒருவர் ஆவார்.
[33] ஜெயச்சந்திரனின் திருமண வைபவ நிகழ்வில் (மே 1998) பிலோமினம்மா ஆற்றிய தனது வாழ்த்துரையில் "தமிழ் 1" பணியில் உதவிய அவரைப் பற்றிக் குறிப்பிடுகிறார். ஜெயச்சந்திரன் ஓகஸ்ட் மாதம் 1988 ஆம் ஆண்டு ஒரு மாணவராக நோர்வேக்கு புலம்பெயர்ந்தார். 1989 ஆம் ஆண்டு இலங்கையிலிருந்து தனது முதல் தட்டச்சுப்பொறியைப் (typewriter) பெற்றார். 1990 களில் பல்வேறு சஞ்சிகை மற்றும் நூல் வேலைத்திட்டங்களை முன்னெடுத்த தமிழ் அமைப்புகளிற்கு தட்டச்சுப்பொறி, பின்னர் கணினியில் தமிழ் தட்டச்சு செய்ய உதவினார்.

அவர்கள் அறிமுகப்படுத்தப்பட்டனர். தமிழ் கலாச்சாரத்தையும் மக்களையும் பிரதிபலிக்கும் பாடநூலிற்கான சித்திரங்களை அவர் வரைந்தார் என்று கரோலின் கூறுகிறார்.
அனைத்து எடுத்துக்காட்டுகளும் முடிந்ததும், ஜோர்ஜ் பாடநூல்ப் பக்கங்களை முடித்து, "தமிழ் 1" நூலின் முதல் வரைவை ஒஸ்லோவிற்கு அனுப்பினார். ஆனால் அந்த சித்திரங்களை Kultorbro பதிப்பகம் ஏற்றுக்கொள்ளவில்லை.
இதற்கான சரியான காரணம் ஜோர்ஜ் குடும்பத்திற்கு தெரியவில்லை. எவ்வாறாயினும், அந்த சித்திரங்களை வரைந்த அந்த தமிழ் இளைஞருக்காக பிலோமெனம்மா வருத்தப்பட்டதை கரோலின் குறிப்பிட்டார்.

தேசிய கற்பித்தல் உதவி மையம் (Nasjonalt læremiddel senter/ National Teaching Aids Center) இந்த வேலைத் திட்டத்திற்காக ஒஸ்லோவில் ஒரு தமிழ் மொழிக்கான ஒரு ஆலோசகரை வேலைக்கு அமர்த்தியது. ஆனால் அவருடைய தமிழ் மொழிப் புலமைப் பற்றாக்குறை காரணமாக அவரை மாற்ற வேண்டிய அவசியம் வந்தது, என்று ஜோர்ஜ் கூறுகிறார். இந்த காலகட்டத்தில், «தமிழ் 1» பாடநூல் வேலைத்திட்டம் ஆரம்பித்து இரண்டரை ஆண்டுகள் தொடக்கம் மூன்று ஆண்டுகள் வரை கடந்து விட்டன.
கணினியில் தமிழ் தட்டச்சு செய்தல், ஆலோசகருடனான தகவல்தொடர்புகளில் ஏற்பட்ட சிக்கல்கள், பொருத்தமான சித்திரங்கள் பெற்றுக் கொள்வதில் சவால் என்று பல தொழில்நுட்ப மற்றும் தொழில்முறை (professional) சவால்களால் ஜோர்ஜ் தம்பதியினர் சோர்ந்து போயினர். அவர்கள் ஒஸ்லோவில் இருந்த வேலைத்திட்ட மேலாளரிடம் இச்சவால்களைப் பற்றியும் இத்திட்டத்தைக் கைவிடும் எண்ணத்தைப் பற்றியும் பேசினர். «ஆனால் அவர் எமக்கு ஆதரவாக இருந்து, இவ்வேலைத்திட்டத்தைத் தொடர்ந்து செய்யுமாறு எங்களை ஊக்குவித்தார்," என்று ஜோர்ஜ் கூறிகிறார். இந்நிலையில், பணியை எளிதாக்க அவர்களுக்கு ஒரு தமிழ் ஆலோசகர் தேவைப்பட்டார்.

1989 ஆம் ஆண்டு ட்ரொண்ட்ஹெய்மில் (Trondheim) நிகழ்ந்த தாய்மொழி ஆசிரியர்களுக்கான கருத்தரங்கில் பிலோமினம்மா முதல்முறையாக பங்கேற்றார். அதன் பின்னர் அவர் தொடர்ச்சியாக நோர்வேயின் பல நகரங்களில் ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்குகளில் பங்கேற்றார். 1990 களின் முற்பகுதியில், ஒஸ்லோவிற்கு அருகே ஒரு கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அக்கருத்தரங்கில் பல நோர்வேயிய நகரங்கள் மற்றும் கிராமங்களைச் சேர்ந்த தாய்மொழி ஆசிரியர்கள் பங்கேற்றனர். அங்கு, இன்னுமோர் தமிழ் தாய்மொழி ஆசிரியராக பணியாற்றிய நாகரத்னம் ரத்னசிங்கத்தை[34] பிலோமினம்மா சந்தித்தார். வேலைத்திட்ட மேலாளர் ஏற்கனவே நூலின் முதல் வரைவை நாகரத்னத்திற்கு அனுப்பியிருந்தார். அதற்கு அவர் தனது பின்னூட்டங்களை அனுப்பியிருந்ததை பிலோமினம்மா பெற்றிருந்தார். இதை அடிப்படையாகக் கொண்டு அக்கருத்தரங்கில் அவர்கள் ஏதேனும் மாற்றங்கள் பரிந்துரைக்கப்பட்டிருந்தால் அதைப் பற்றியும் உரையாடினர், என்று நாகரத்னம் கூறுகிறார்.

[34] நாகரத்தினம் இரத்னசிங்கம் 1980 களில் இலங்கையிலிருந்து ஒஸ்லோ பல்கலைக்கழக (UiO) கல்வி அனுமதிக்கு விண்ணப்பித்தார். அன்று இருந்த ஒரு கல்வி ஒழுங்கின் அடிப்படையில், மேற்குலக நாடுகள் அல்லாத ஏனைய நாடுகளைச் சேர்ந்த வெளிநாட்டு மாணவர்கள் வெளிநாட்டிலிருந்து நோர்வேயில் கல்வி அனுமதி விண்ணப்பிக்கும் வசதி இருந்தது. அவர் யனவரி 1982 ஆம் ஆண்டு நோர்வேக்கு புலம்பெயர்ந்து, 1982 ஆம் ஆண்டு வசந்த காலத்தில் தனது கல்வியை ஆரம்பித்தார். 1982 ஆம் ஆண்டு UiO வில் தமிழ் பின்னணியைக் கொண்ட மாணவர்களில் இவர் ஒருவராக இருந்தார். UiO வின் தகவலின் அடிப்படையில், இலங்கைக் குடியுரிமை பெற்ற 5 நபர்கள் அதே ஆண்டில் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளனர். இலங்கைக் குடியுரிமை பெற்ற ஒருவர் 1972, 1980 மற்றும் 1981 ஆம் ஆண்டுகளில் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார். நாகரத்தினம் இரத்தினசிங்கம் 1984 ஆம் ஆண்டு Akershus (அகர்ஷஸ்) மாகாணத்தில் பணியாற்றிய முதல் தமிழ் தாய்மொழி ஆசிரியர் என்று அறியப்படுகின்றார்.

பிலோமினம்மா, நாகரத்னம் மற்றும் வேலைத்திட்ட மேலாளர் இரண்டு கூட்டங்களில் பரிந்துரைகளைப் பற்றி விவாதித்தனர். ஒன்று ஒஸ்லோவில், மற்றொன்று பேர்கனில் ஒழுங்கு செய்யப்பட்டது. நோர்வேயிய சூழலிற்கு ஏற்றவாறு எடுத்துக்காட்டுச் சித்திரப் படங்கள், சொற்கள் மற்றும் சொற்கூறுகள் மாற்றியமைப்பதே இதன் நோக்கமாக இருந்தது. நோர்வேயிய ஆலோசகர்கள் சொற்கள் மற்றும் சொற்கூறுகள், எடுத்துக்காட்டிற்கான சித்திரப் படங்கள் நோர்வேயில் வளரும் சிறுவர்கள் இனம் காணக்கூடியவாறு இருக்க வேண்டும் என்பதில் கவனம் செலுத்தினர். அதோடு அவை சிறுவர்களுக்கு விளங்கக் கூடியவாறு இருக்க வேண்டும் என்பதிலும் கவனம் கொண்டிருந்தனர், என்று நாகரத்னம் கூறுகின்றார். கூட்டம் முடிவடைந்ததும், ஒஸ்லோவிலிருந்து வருகை தந்த இருவரையும் ஜோர்ஜ் தம்பதியினர் விருந்துபசாரத்திற்கு[35] அழைத்தனர். ஜோர்ஜ் மற்றும் பிலோமினம்மா பின்னர் நாகரத்னத்துடன் நல்ல உறவையும் ஒத்துழைப்பையும் கொண்டிருந்தனர். மேலும் வேலைத்திட்டப்பணிகளை பிலோமினம்மா மீண்டும் தொடங்கினார். நாகரத்தினம், ஹில்டே டிராவிக் (Hilde Traavik) மற்றும் அன்னே-லிஸ் ஒவ்ரபொத்தன் (Anne-Lis Øvrebotten) ஆகியோருடன் இணைந்து, உள்ளடக்கத்திற்கான ஆலோசனை, நோர்வேயியப் பாடத்திட்டத்தின் அடிப்படையில் உள்ளடக்கக் கட்டுப்பாடு மற்றும் தர உத்தரவாத மேம்பாட்டின் அடிப்படையில் பணியாற்றினார். இவர்கள் அனைவரும் நோர்வேயிய மற்றும் தமிழ் உள்ளடக்க புரிதலுக்கு இடையில் ஒரு பாலம் உருவாக்கி, அதன்வழி தமிழ் பாடநூல்களை நோர்வே சூழலிற்கு ஏற்றவாறு அமைக்கும் நோக்குடன் செயற்பட்டனர்.

"தமிழ் 1" இன் தொடர்ச்சி

ஃப்ரெடா மாக்னுசென் (Freda Magnussen) "தமிழ் 1" பாடநூல் திட்டத்திற்கான சித்திரங்களை வரையும் பணியை மேற்கொண்டார். அனைத்து எடுத்துக்காட்டுகளையும் ஒரு குறுவட்டில் சேமித்து ஜோர்ஜிற்கு அனுப்பினார். அதே நேரத்தில், ஜோர்ஜ் தனது கணினித் திறனை மேம்படுத்தினார்.
இக்காலகட்டத்தில், ஜோர்ஜ் "சரஸ்வதி" எழுத்துருவைத் தவிர ஏனைய தமிழ் எழுத்துரு வடிவங்களைப் பெற்றுக் கொண்டார். "சரஸ்வதி" சதுரம் சதுரமாக காட்சியளிக்கும் (pixalate) ஒரு எழுத்துருவாக இருந்தமையால் அவர் மற்றொரு எழுத்துரு வடிவத்திற்கு மாற்றினார்.

பல தமிழ் மாணவர்களின் உதவியுடன் ஜோர்ஜ் தொழில்நுட்ப சவால்களைத் தீர்த்து "தமிழ் 1" பாடநூலை நிறைவு செய்தார். ஜோர்ஜ் மற்றும் பிலோமினம்மா பாடநூலின் மின்னணுக் கோப்பை ஒரு குறுவட்டில் பதிந்து ஒஸ்லோவிற்கு அனுப்பினார்கள். ஆனால் அவர்கள் தமிழ் எழுத்துருவில் சவால்களை எதிர்கொண்டனர். ஒரு கணினியிலிருந்து இன்னொரு கணினிக்கு அக்கோப்பை மாற்றியபோது எழுத்துக்கள் மற்றும் சொற்கள் மாற்றம் பெற்றன. நடைமுறை சவால்களைத் தீர்ப்பதற்கு ஜோர்ஜ் தம்பதியினருக்கு பேர்கன் வாழ் ஒரு தமிழ் ஆலோசகர் தேவைப்பட்டார். அவ்வாறு, தயாளன் வேலயுதப்பிள்ளை[36] தமிழ் ஆலோசகராக

---

[35] விருந்துபசாரத்திற்காக ஒருவரை வீட்டிற்கு அழைப்பது தமிழரின் விருந்தோம்பல் பண்பாடு ஆகும். விருந்தினரை நல்ல உணவு மற்றும் பானத்துடன் வரவேற்று மற்றும் நல்ல பிரியாவிடை அளிப்பதைக் குறிக்கும். ஒசுலோவுக்கு வெளியே தாய்மொழிக் கருத்தரங்கு நடைபெற்றபோது நாகரத்தினம் அனைத்து தாய்மொழி ஆசிரியர்களையும் தனது வீட்டிற்கு ஒரு விருந்துபசாரத்திற்காக அழைத்திருந்தார்.

[36] தயாளன் வேலாயுதப்பிள்ளை ஓகஸ்ட் 1984 ஆம் ஆண்டு நோர்வேயில் உள்ள பேர்கன் பல்கலைக்கழகத்தில் கல்வி அனுமதி பெற்று இந்த நாட்டிற்கு ஒரு மாணவராக புலம்பெயர்ந்தார். 1989 ஆம் ஆண்டு அதே பல்கலைக்கழகத்தில் முதுகலை மாணவராக கல்வி கற்ற போது பேர்கன் நகராட்சியில் தமிழ் தாய்மொழி ஆசிரியராக தனது பணியை ஆரம்பித்தார். UiB இன் அடிப்படியில், அவர்களிடம் குடியுரிமை அடிப்படியிலான தகவல்கள் மட்டுமே உள்ளன. அதனால் UiB இன் அமைப்பின் (system) அடிப்படையில் இலங்கையிலிருந்து UiB

பணியமர்த்தப்பட்டார். ஒசுலோவிலிருந்து பணியாற்றிய பிற ஆலோசகர்கள் கொண்டிருந்த கடமைகளை இவரும் கொண்டிருந்தார். தயாளன் முன்னரே ஜோர்ஜ் மற்றும் பிலோமினம்மா ஆகியோருக்கு பல்வேறு தமிழ் சமூக நடவடிக்கைகள் மூலம் நன்கு அறிமுகமானவராக இருந்தார். அவர் பேர்கனில் வசித்து வந்ததால், இந்த வேலைத்திட்டத்தை விரைவாகச் செயற்படுத்த ஜோர்ஜ் தம்பதியினருக்கு எளிதாக இருந்தது. நாகரத்தினம் மற்றும் தயாளன் ஆகிய இருவரின் கூற்றுப்படி, தமிழ் ஆலோசகர்களாக இருந்த தாம் இருவரும் தனித்துச் சந்தித்து கூட்டங்கள் மேற்கொள்ளவில்லை. ஆனால் பிலோமினம்மா ஒஸ்லோ மற்றும் பேர்கன் ஆகிய இரு நகரங்களிலும் அங்கு வசித்த தமிழ் மற்றும் நோர்வேயிய ஆலோசகர்களுடனும் வேலைத்திட்டப் பொறுப்பாளர்களுடனும் சந்திப்புகளை மேற்கொண்டார்.

பிலோமினம்மா மற்றும் தயாளன் இருவரும் "தமிழ் 1" பாடநூல் வேலைத்திட்டத்தின் இறுதிப் பகுதியில் ஓவியருடன் கூடிப் பணியாற்றி, "தமிழ் 2" இலும் அப்பணியைத் தொடர்ந்தனர். தமிழர் மற்றும் தமிழ் பண்பாட்டை பிரதிபலிக்கும் சித்திரங்களை வரைவதற்கு தமிழ் அல்லாத பின்னணியைக் கொண்ட ஒரு ஓவியருக்கு விளக்குவது எளிதான செயலாக இருக்கவில்லை. உதாரணமாக, ஒரு தமிழ்த்தாய் மற்றும் தந்தை எப்படி இருப்பார்கள், அவர்களின் உடை நடை, தாயின் பின்னல் மற்றும் அவர் அணியும் ஆபரணங்கள் போன்றவற்றை ஓவியரிடம் விரிவாகக் கூற வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், ஓவியர் தனது திறமையால் சித்திரங்களை மீள் உருவாக்கம் செய்ய கூடிய நேரம் எடுத்து அதனை வரைந்தார், என்று தயாளன் குறிப்பிடுகின்றார். அவர் தொடர்ந்து கூறுகையில், தமிழ்த்தந்தையர் உட்பட வேற்றினத் தந்தையர் வீட்டு வேலைகளில் பொறுப்பேற்பதில்லை என்ற பொதுவான கருத்து நிலவுவதைக் குறிப்பிட்டார். ஆனால் அனைத்து வீடுகளிலும் அவ்வாறு அல்ல. எனவே, அவர்கள் வரையப்பட்ட சித்திரங்களில் "தந்தை" முன்னோக்கை ஊக்குவித்தனர். ஒஸ்லோவில் இருந்த மற்ற தமிழ் ஆலோசகர்களுடன் இணைந்து, உள்ளடக்கப் பிழை திருத்தம் மற்றும் M87 இன் அடிப்படையில் உள்ளடக்க உறுதிப்படுத்தல் செய்தனர்.

இல் இணைந்து, தவணைப் பதிவு செய்து, தேர்வு எழுதிய முதல் மாணவர் 1975 ஆம் ஆண்டு இலையுதிர்காலத்தில் ஆகும்.

வெளியீடு





FORORD

At et barn får sin første lesebok på sitt eget språk, er for mange en selvfølge. Tamilske barn har ikke hatt det. Dette er den første leseboken som gir barn fra Sri Lanka som vokser opp i Norge, en første innføring i deres eget språk. Boken følger M-87 og tar utgangspunkt i barnas hverdag i Norge. Denne boken er skrevet av av Philominamma George, utdannet pedagog fra Sri Lanka og med mange års erfaring som morsmålslærer i Norge.

Alle egentlige vokaler og konsonanter, i alt 30, i det tamilske syllabariet er presentert i denne leseboken. Disse 30 tegnene er de egentlige bokstavene i syllabariet, de andre tegnene er stavelsestegn, som er en kombinasjon av vokaler og konsonanter. For et barn bosatt i en annen kultur vil det ta mange år å lære hele syllabariet, som til sammen består av 252 tegn.

Hvert tegn er presentert ved illustrasjoner og navn på kjente ting fra barnas hverdag. I tillegg til presentasjonen av tegnene finner vi tekster som er ment som opplevelseslesning for barna. Disse tekstene tar for det meste utgangspunkt i barnas norske hverdag og skal leses av læreren. Andre tekster er tradisjonelle regler og sanger og regler/sanger skrevet av forfatteren.

I tillegg til tekster, finner vi en god del samtalebilder, slik det er vanlig i norske lesebøker. Samtale mellom lærer og elev er viktig i språkopplæringen, og disse bildene tar utgangspunkt i elevenes norske hverdag."Muntlig bruk av språket mellom elevene styrker samholdet i gruppen og letter læring i fellesskap. Muntlig trening skal bygge opp og videreutvikle elevenes generelle ferdigheter i morsmålet og legge grunnlag for den videre lese-og skriveopplæringen." (M-87 Kap. 24 s. 183.)

Forfatteren har også valgt en del begreper fra tamilsk kultur som hun mener barna må bli kjent med. Hun presenterer bl.a. en berømt kvinnelig forfatter som alle barn på Sri Lanka kjenner. Kulturorientering er en viktig del av morsmålsundervisningen.(M-87 Kap 24 s. 186.)
Denne boken er et viktig bidrag til å høyne og sikre kvaliteten på morsmålsundervisningen i Norge og til å lette arbeidssituasjonen for morsmålslærerne. Det er utarbeidet en lærerveiledning til boken.

Lykke til med bruken av boken.

Anne-Lis Øvrebotten
Norsk pedagogisk konsulent.

பாடநூல் உருவாக்கத் திட்டத்தின் ஒப்பந்தப்படி, பிலோமினம்மா 1 முதல் 6 ஆம் வகுப்பு வரையிலான பாடநூல்களைத் தயாரிக்க வேண்டும். ஆனால் முதல் நூலை உருவாக்க சுமார் 3 ஆண்டுகள் ஆனது. ஆனால் இந்த வேகத்தில் ஆறு வகுப்புகளுக்குமான பாடநூல்களை தயாரிக்க முடியாது என்பதை பிலோமினம்மா விரைவாக உணர்ந்தார். எனவே பிலோமினம்மா பாடநூல்களின் உள்ளடக்கத்தை அதிகரித்து, «தமிழ் 1» ஐ 1ம் மற்றும் 2ம் வகுப்புகளுக்கான நூலாக மாற்ற முடிவு செய்தார், என்று ஜோர்ஜ் மற்றும் தயாளன் ஆகிய இருவரும் கூறுகிறார்கள். பின்னர் நூலின் முதல் பகுதி 1ம் வகுப்பு மாணவர்களுக்கு ஏற்றவாறு ஒழுங்கு செய்யப்பட்டது. இறுதிப் பகுதி 2ம் வகுப்பு மாணவர்களுக்கு ஏற்றவாறு உள்ளடக்கத்தின் நிலையை சற்றுக் கூட்டி ஒழுங்கு செய்யப்பட்டது. இருப்பினும் இந்த நூல் 1ம் வகுப்பு மாணவர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது என்று «தமிழ் 1» இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

சில வருட கடின உழைப்பின் பின்னர் «தமிழ் 1» பாடநூல் தேசிய கற்பித்தல் உதவி மையத்தின் ஆதரவுடன் 1995 ஆம் ஆண்டு ஒஸ்லோவில் குல்தூர்ப்ரோ (Kulturbro) பதிப்பகத்தால் வெளியிடப்பட்டது. இது நோர்வேயிய அரச பள்ளிகளில் தமிழ் தாய்மொழிக் கல்விக்காக நோர்வேயில் வெளியிடப்பட்ட முதல் பாடநூல் ஆகும்.

எழுத்து அறிமுகக் கல்வி

"தமிழ் 1" 12 உயிர் எழுத்துக்களையும் 18 மெய் எழுத்துக்களையும் அறிமுகப்படுத்துகின்றது. அதாவது 247 தமிழ் எழுத்துகளில் அவை 30 எழுத்துகள் ஆகும். பிற எழுத்துகள் உயிர்மெய் எழுத்துகள் ஆகும். இந்த நூல் ஈழத்தில் பாரம்பரியமாக பின்பற்றப்பட்ட தமிழ் எழுதுதல் முறையை அடிப்படையாகக் கொண்டது. இது தமிழ் எழுத்து அட்டவணையில் உள்ள முதல் உயிர் எழுத்தான «அ» எனும் எழுத்துடன் ஆரம்பிக்கின்றது. அதோடு, எழுத்தின் ஒலி உச்சரிப்புக்கு (phonetic) பதிலாக ("அ" மற்றும் "ஆ"), "அனா" மற்றும் "ஆவன்னா" என்று உச்சரித்தார்கள்.

1990 களின் முற்பகுதியில், புலம்பெயர் தமிழர் மத்தியில் தமிழ் எழுத்து அறிமுகக் கல்வி ஒரு பேசுபொருளாகியது (discourse), என்கிறார் குமரேந்திரன் இளையதம்பி[37]. இவர் 1994-1997 காலப்பகுதியில், அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடத்தின் நிர்வாக உறுப்பினராக இருந்தார். அதுவே இன்று றொம்மன் வளாகமாக உள்ளது. குமரேந்திரன் இளையதம்பி அவர்கள் அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடத்தால் 1997 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அதன் முதல் தமிழ்ப் பாடநூல் தொடர் (தமிழ் அமுது) செயல்திட்டத்திற்குப் பொறுப்பாக இருந்தார்.

சிறுவர் பாடல் ஒலிநாடாக்கள் போன்ற கற்பித்தல் உபகரணங்கள் தயாரிக்கும் பணி 1993 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டது. தமிழ் பாடநூல் தயாரிக்கும் பணி 1994 காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டு 1997 இல் நிறைவுக்கு வந்தது. ஆரம்ப வகுப்பு முதல் ஆண்டு 10 வரையான 10 பாடநூல்கள் வெளியிட்டு வைக்கப்பட்டன. இந்த பாடநூல் தொடர் நோர்வேயில் உள்ள நகரசபை அல்லது அரச ஆதரவின்றி ஒரு புலம்பெயர் தமிழ் அமைப்பினால் சுயாதீனமாக நோர்வேயில் வெளியிடப்பட்ட (selvpublisert) முதல் பாடநூல் தொடராக கருதப்படுகிறது. புலம்பெயர் மண்ணில் கல்வி மேம்பாட்டுப் பேரவை எனும் சர்வதேசக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டு பல்வேறு புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழ் சிறுவர் மற்றும் இளைஞர்களுக்கான பொதுவான பாடநூல்கள் வெளியாகி, அது 24.08.2002 அன்று நோர்வேயில் அறிமுகப்படுத்தும் வரை, தமிழ் அமுது பாடநூல் தொடர் நோர்வேயில் பரவலாக பயன்பாட்டில் இருந்தது. இக்காலப்பகுதிக்குப் பின்னரும் பிலோமினம்மா ஜோர்ஜ் போன்ற தமிழ்மொழி ஆசிரியர்கள் தமது கற்பித்தல் பணியில் தமிழ் அமுது பாடநூல் தொடரை பயன்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

படம்: "Tamil writing in new method" (1993), றீட்டா பற்றிமாஹரன்

---

[37] குமரேந்திரன் இளையதம்பி 1988 ஆம் ஆண்டு இந்திய-இலங்கை சமாதான ஒப்பந்தம் தோல்வியடைந்ததாலும், இந்திய அமைதிப் படை (IPKF) தமிழர்கள் மீது மேற்கொண்ட வன்முறை காரணமாகவும் நோர்வேக்கு புலம்பெயர்ந்தார்.

சமூக மட்டத்திலான பேசுபொருளின் முக்கிய நோக்கம் எழுதுதல் பயிற்சியை எளிதாக்குவதாகும். அதே காலகட்டத்தில், “Tamil writing in new method” (1993)[38] என்ற நூலை ரீட்டா பற்றிமாஹரன் [39] இங்கிலாந்தில் வெளியிட்டார், என்று குமரேந்திரன் இளையதம்பி கூறுகின்றார். இந்த நூல் alphabet எழுத்துக்களில் உள்ள ஒலி உச்சரிப்புக் கல்வி (Phonics) முறையை அடிப்படையாகக் கொண்டு தமிழ் எழுத்துக்களை எளிதான முறையில் அறிமுகப்படுத்துவதை மையப்படுத்தியது. இந்த முறைமை மெய் எழுத்தான «ட்» மற்றும் அதைத் தொடர்ந்த உயிர்மெய் எழுத்தான «ட» எனும் எழுத்துக்களுடன் ஆரம்பிப்பது ஆகும். ஈழத்தில் பாரம்பரியாமாக "அ" எனும் எழுத்துடனே எழுதுதல் கல்வி ஆரம்பமாகும். உயிர் எழுத்தான "அ" வட்டங்கள் மற்றும் வளைவுகள் கொண்டது. அவை எழுதத் தொடங்கும் ஒரு குழந்தைக்கு சவாலாக இருந்ததை பரவலாக புலம்பெயர் மண்ணில் அவதானிக்கப்பட்டது. மெய் எழுத்தான «ட்» மற்றும் பின்வரும் எழுத்தான «ட» ஆகியவை கோடுகளை மட்டுமே கொண்டிருக்கும். இந்த முறைமை ஏற்கனவே இந்தியாவில் தமிழ்நாடு, மற்றும் சிங்கப்பூர் அரச பள்ளிகளில் கற்பிக்கப்பட்டு வந்தது. இருப்பினும், தமிழர் பண்பாட்டில் ஒரு குழந்தை மூன்று வயது பருவத்தில் ஏடு தொடக்கும் பொழுது "அ" எனும் எழுத்தை நெல்லில் எழுதி அக்குழந்தையின் கல்வியை ஆரம்பித்து வைப்பார்கள்.

படம்: நோர்வே அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடத்தின் தமிழ் அமுது பாடநூல் தொடர் உருவாக்கத்தில் பயன்படுத்தப்பட்ட நூல்களும், அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடத்தின் ஆரம்பகால பாடத்திட்டமும் (1993-1994). (படம்: குமரேந்திரன் இளையதம்பி, 2023)

புலம்பெயர் வாழ் தமிழருக்கு இந்த புதிய முறைமை 1990-களில் புதிதாக மற்றும் ஒரு சில மட்டங்களில் விமர்சனத்திற்கும் உள்ளானது. உயிர் எழுத்தான "அ" எழுத்தில் கல்வி ஆரம்பிக்காமல், உயிர் மெய் எழுத்தான «ட்», «ட» எனும் எழுத்துகளில் ஆரம்பிப்பது

[38] Fatimaharan (1993)

[39] ரீட்டா பாத்திமாஹரன் ஈழத்தில் பயிற்சி பெற்ற ஆரம்பப் பள்ளி ஆசிரியர் ஆவார். அவர் 1991 (?) இல் பிரித்தானியாவிற்கு புலம்பெயர்ந்தார்.

முறையல்ல என்ற விமர்சனத்தைப் பற்றி ரீட்டா பற்றிமாஹரன் தனது வாய்மொழி வரலாற்று நேர்காணலிற்குப் பின்னர் கூறினார். ஒரு மொழிக் கல்வியில் பேசுதல், எழுதுதல், வாசித்தல், கேட்டல் மற்றும் புரிதல் என்ற பக்கங்கள் உள்ளன. இதில் 1990-களில் உருவான சமூக மட்டத்திலான பேசுபொருள் எழுதுதல் பகுதியை எளிதுபடுத்துதல் தொடர்பாக இருந்தது. ஒரு குழந்தை 3-4 வயதில் வீட்டில் மற்றும் தமிழ்ப் பள்ளியில் தமிழ் மொழியை கற்க ஆரம்பிக்கும் போது பேசுதல் மூலமே ஆரம்பிக்கின்றது. அப்பொழுது உயிர் எழுத்துக்களைக் கொண்ட எழுத்து, சொல், பாடல், கதை மற்றும் வாய்மொழி என்று ஆரம்பித்த பின்னரே எழுதுதல் பயிற்சியை ஆரம்பிப்பது என்பது தொடர்ச்சியாக நடைமுறையில் உள்ளது, என்று அவர் கூறினார்.



முன்னுரை

இரு மொழித் தொழிற்பாடுடைய இப்புலம் பெயர் சூழலிலே தமிழ்மொழிப் போதனையென்பது இலகுவான விடயமல்ல. வேற்றுச் சூழலில் வளரும் நம் சிறார்களுக்கு தமிழ் கற்பித்தலோ அன்றி அதற்கான பாடத்திட்டமோ, அழுத்தும் சுமையாக அல்லாமல் அருஞ்சுவையாக அவர்களை ஈர்க்கக் கூடியதாய் அமையவேண்டும். இங்கு நிறைந்த அவதானிப்பும், அனுபவமும், பொறுமையும்,உக்தியும் இன்றியமையாததாகின்றது.

அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூட பாடநூலாக்கக் குழுவினால் உருவாக்கப் பட்டுள்ள "தமிழ் அமுது" என்னும் இப்பாடநூல்கள் வரிசை, தமிழ் மொழியினை இலகுவாகக் கற்றுக்கொள்வதற்கு இசைவாக உருவாக்கப்பட்டுள்ளது. இந்நூல் வரிசையில் மொத்தம் பத்து நூல்கள் உள்ளன. அவற்றை ஆரம்ப ஆண்டு முதல் ஒன்பதாம் ஆண்டு வரையான மாணவர்கள் பயன்படுத்துவர். மொழி விருத்தி அடிப்படையில் கேட்டல், பேசுதல், சிந்தித்தல், எழுதுதல், வாசித்தல் ஆகியவற்றை வளர்த்துக் கொள்ள மாணவர்க்கு உதவுவதும், வழிகாட்டுவதும் இப் பாடநூற் தொடரின் முக்கிய நோக்கங்களாகின்றன. அத்தோடு சூழல், பாரம்பரியம், அறநெறிகள், பழக்க வழக்கங்கள் என்ற இன்னோரன்ன விடயங்களும் பாடத் தெரிவுகளில் கருத்திலெடுக்கப்பட்டன.

சூழ்நிலைக்கேற்பவும், காலத்திற்கேற்பவும், தேவைக்கேற்பவும் கற்பித்தல் சாதனங்களும், கற்பித்தல் முறைகளும் மாறுதல் அடைந்தே வந்துள்ளன. இதற்கு இசைவாக காலத்திற்குக் காலம் எமது நூல்களை மீள் மதிப்பீடு செய்வது அவசியமாகின்றது. எதிர்காலத்தில் இம் முயற்சி பெற்றோர்கள், ஆசிரியர்கள், மொழியியல் வல்லுனர்கள், உளவியலாளர்கள் கூட்டுழைப்பின் மூலம் சாத்தியமாகும் என்பதில் எமக்குத் திடமான நம்பிக்கை உண்டு.

இந்நூற் தொகுப்பில் பல படைப்பாளிகளின் முகவரி கிடைக்காத காரணத்தாலும், சில நடைமுறைச் சிக்கல்களாலும் அவர்களுடன் தொடர்பு கொண்டு இசைவு பெற இயலவில்லை. இருப்பினும் அவர்களது படைப்பின் தரம், பெருமை கருதி இணைத்துள்ளோம். இதனை மாணவர் நலம் கருதி அவர்கள் பொறுத்தருள்வார்கள் என நம்புகிறோம்.

பெற்றோர்களே குழந்தைகளின் முதல், முக்கிய ஆசான்கள். இப் பாடப் புத்தகங்களின் துணையுடன் தாய் மொழி விருத்தியில் தங்கள் பிள்ளைகளுக்கு உதவுவதில் பெற்றோர்கள் முன் நிற்க வேண்டும். எதிர் காலத்தில் இந் நூல்களை மேம்படுத்துவதற்குரிய கருத்துக்களை வரவேற்கிறோம். அடுத்த பதிப்புக்களுக்கு அவை பயன் தரும்.

பாடநூலாக்கக் குழு,
அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம்.

ஒஸ்லோ
11.10.97

3

படம்: «தமிழ் அமுது» ஆரம்ப ஆண்டு பாடநூல் (அட்டைப்படமும் முகவுரையும்) (1997)

படம்: 10 பாடநூல்கள் கொண்ட «தமிழ் அமுது» பாடநூல் தொடர், 1997 (படம்: இளையதம்பி குமரேந்திரன், 2023)

சொற்கள் மற்றும் சொற்கூறுகள்

இந்த நூலில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்கள் மற்றும் சொற்கூறுகள், அதோடு உரையாடல்களிற்குரிய படங்கள் நோர்வே வாழ் சிறுவர்களின் அன்றாட வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டவை. ஈழத்தில் பிரபலமான பாரம்பரிய மற்றும் புதிய தமிழ் சொல் விளையாட்டுகள் (rhymes) மற்றும் பாடல்கள் [40] இந்த நூலில் உள்ளன. அவை பிரபல தமிழ் கவிஞர்களால் எழுதப்பட்டவை. அதோடு பிலோமினம்மா எழுதிய பாடல்களும் உள்ளடங்கும்.
அந்தப் பாடல்களை இசையுடன் ஒலி வடிவத்தில் தயாரிப்பது குறித்து தேசிய கற்பித்தல் உதவி மையம் விருப்பம் தெரிவித்தது. ஆனால் அந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதா என்பது உறுதியாகத் தெரியவில்லை.

நோர்வேயிய சூழலில் தமிழ்மொழியைக் கற்க தங்கள் பிள்ளைகளுடன் பெற்றோருக்கும் இது ஒரு புதிய அனுபவப் பயணமாக அமைந்தது. "தமிழ் 1" பாடநூல் வெளியானபோது, தாயகத்தில் வழக்கமாகப் பயன்படுத்தப்படும் சொற்களும் சொற்கூறுகளும் இந்தப் பாடநூலில் தவிர்க்கப்பட்டுள்ளதை ஒட்டி அவர்கள் விமர்சனம் வைத்தனர். இருப்பினும், பிலோமினம்மா தமிழ்ப் பண்பாட்டு வழக்கத்தில் உள்ள சில சொற்களை சிறுவர்கள் நன்கு தெரிந்திருக்க வேண்டும் என்பதற்காக அவர் தேர்ந்தெடுத்தார், என்று அன்னே-லிஸ் ஒவ்ரபொத்தன் தனது முன்னுரையில் எழுதுகின்றார். ஆனால் நோர்வேயிய அன்றாட வாழ்க்கை முறைக்கு ஏற்றவாறு நூலை வடிவமைக்கும் செயல்முறை சவாலாக இருந்ததை பிலோமினம்மாவே எழுதுகிறார். உதாரணமாக ஈழத்தில் அதிகம் பயன்படுத்தப்படாத நோர்வேயியச் சொற்கள் மற்றும் சொற்கூறுகளின் நேரடி தமிழ் மொழிபெயர்ப்பு. அதேபோல் நேர்மாறாக, தமிழ் எழுத்துக்களைக் குறிக்கும் நோர்வேயிய சூழலில் பயன்படுத்தபடும் சொற்களைக் கண்டறிவது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் பிலோமினம்மா ஈழத்தில் பொதுவாக பயன்படுத்தும் சொற்களைச் சேர்க்க வேண்டியிருந்தது. ஆனால் அவை நோர்வேயிய சூழலில் வாழும் தமிழ் சிறுவர்களுக்கு அறிமுகம் இல்லாத சொற்கள், பொருட்களாக இருக்கலாம்.

நோர்வேயில் வளரும் தமிழ் குழந்தைகளுக்கு தமிழ் கற்பிப்பதற்காக நோர்வே சூழலை அடிப்படையாகக்

[40] George (1995, p. 113)

கொண்டு வடிவமைக்கப்பட்ட பாடநூல் "தமிழ் 1" என்பதை புரிந்துகொள்ள சில பெற்றோர்களுக்கு சவாலாக இருந்தது, என்று தயாளன் கூறுகிறார். பாடநூலின் எண்ணக்கரு (concept) தொடர்பாக பெற்றோர் மத்தியில் விமர்சனங்கள் எழுந்தன. அவை பெற்றோரின் எதிர்பார்ப்பு மற்றும் புரிதலின் அடிப்படையாகக் கொண்ட விமர்சனங்களாக இருந்தன. நோர்வேயிய சூழலில் தமிழ் கல்வி என்றபோதிலும், "தமிழ் 1" இன் உள்ளடக்கத்தில் ஆரம்பப் பக்கங்களிலேயே சிறு பந்திகள் இணைக்கப்பட்டிருந்தன. இப்பந்திகள் சிறுவர்களிற்குப் பெரியோர் வாசித்துக் காட்ட வேண்டும் என்ற நோக்கோடே இணைக்கப்பட்டிருந்தன. இது நோர்வேயியப் பாடத்திட்டத்தின் அடிப்படையில் கேட்டல் மற்றும் பேசுதல் திறன்களை வளர்ப்பதற்காக இவ்வாறு உள்ளடக்கங்கள் இணைக்கப்பட்டு வரிசைப்படுத்தப்பட்டன.

இந்த பாடநூல் உருவாக்கத்திற்காக அவர்கள் செய்த தேர்வுகளின் நோக்கம், நோர்வேயிய சூழலில் வாழும் சிறுவர்கள் தாம் கற்கும் சொற்களையும் சித்திரங்களையும் இனம் காண வேண்டும். அதோடு ஆசிரியர்களும் தாம் சிறுவர்களுக்கு கற்பிக்கும் சொற்கள் அவர்களுக்கு விளக்கக்கூடியவாறு உள்ளதா என்பதை அறிதல் வேண்டும் போன்ற காரணங்களை பெற்றோருக்கு எடுத்துரைத்ததும் அவர்கள் புரிந்து கொண்டனர். காலப்போக்கில், பெற்றோர்கள் நோர்வேயிய சூழலில் தமிழ் மொழிக் கல்வி கற்றல் குறித்த புரிதலைப் பெற்றனர்.

படம்: பாடநூலில் பாடம் «அ» எனும் எழுத்துடன் ஆரம்பிக்கப்படுகின்றது. (Tamil 1, 1995)

ஈழத்தில் தமிழ் பாடநூல்

ஈழத்தில் இருந்த சூழல் நிச்சயமாக வேறுபட்டு இருந்தது. சிறுவர்கள் தமிழுடன் வளர்ந்தார்கள், அவர்கள் அதை தினமும் பயன்படுத்தினார்கள். சிறுவர்கள் பொதுவாக பள்ளி ஆரம்பிக்கும் போது கேட்டல் மற்றும் பேசுதல் திறன்களை வளர்த்துக் கொண்ட நிலையில் இருந்தார்கள். சிறுவர்கள் எழுதவும் வாசிக்கவும் கற்றுக்கொள்ளவே பள்ளிக்கு வந்தார்கள். "தமிழ் 1" பாடநூலுடன் ஒப்பிடும்போது, ஈழத்தில் ஒரு 1 ஆம் வகுப்பிற்கு பயன்படுத்திய பாடநூல் வேறுபட்ட வடிவமைப்பைக் கொண்டிருந்தது. அது "தமிழ் 1" பாடநூலில் இருந்த வரிசைப்படுத்தலை விட வேறு வரிசையைக் கொண்டிருந்தது. பாடநூலின் முதல் பகுதி எழுத்து அறிமுகத்தைக் கொண்டிருந்தது. அவை 12 உயிர் எழுத்துக்களுடன் ஆரம்பித்தது (அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ,). பின்னர் அந்த எழுத்துக்களைக் கொண்ட பொருத்தமான, எளிதான சொற்கள் மற்றும் சித்திரங்கள் அடுத்தடுத்த பக்கங்களில் ஒழுங்கு படுத்தி இருக்கும். பாடநூலின் இறுதிப் பகுதியில் 5-6 வசனங்களைக் கொண்ட சிறு பந்தி இருக்கும். இதோடு பாரம்பரிய பாடல்களும் கதைகளும் இருக்கும். கதைகள் என்று வரும்போது, அவை ஒரு பக்கத்தில் நான்கு கட்டங்களைக் கொண்ட சித்திரங்களாக வடிவமைக்கப்பட்டிருக்கும். அதை ஆசிரியர் பார்த்து வாய்மொழியாக மாணவர்களுக்கு கூறுவார். இந்தப் பாடநூல்கள் தமிழ் மொழியை தமிழ் சூழலில் கற்பிக்கப் பயன்படுத்தப்பட்டன.

1970 க்கு முன்னர் இலங்கை அரசால் தமிழ் மொழிக் கல்விக்கான பொதுவான பாடநூல் எதுவும் வெளியிட்டப்படவில்லை, என்று நாகரத்தினம் கூறுகிறார். 1970 ஆம் ஆண்டு, இலங்கை அரசு «புதிய பாடத்திட்டம்»[41] என்ற பெயரில் பாடத்திட்டத்தை மாற்றியமைத்து, தமிழ் மொழிக் கல்விக்கான பொதுவான பாடநூலை வெளியிட்டது. ஆனால் அவை 5 ஆம் வகுப்பு முதல் அதற்கு மேற்பட்ட வகுப்புகளுக்கு மட்டுமே வெளியானது. ஆரம்ப வகுப்புகளிற்கான தமிழ் பாடநூல்களின் தேர்வு மற்றும் பயன்பாடு ஆசிரியர்களின் பொறுப்பில் விடப்பட்டது. அவர்கள் பயன்படுத்திய தமிழ் பாடநூல்கள் தனியார் பதிப்பகங்கள் உருவாக்கி வெளியிட்டவையாக இருந்தன.

நோர்வேயில் உருவாக்கப்பட்ட "தமிழ் 1" பாடநூல் நோர்வேயிய M87 பாடத்திட்டத்தின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் இது M87 இன் 24 ஆம் அத்தியாயத்தின்படி, வாய்மொழி பயிற்சியை மையப்படுத்திய ஒரு பாடநூலாக அமைத்திருந்தது. *«ஒரு மொழியின் வாய்மொழிப் பயன்பாடு மாணவர்களிடையே ஒரு குழுவாக ஒத்திசைவைப் பலப்படுத்துகிறது மற்றும் ஒன்றாகக் கற்க எளிது படுத்தி உதவுகிறது. வாய்மொழிப் பயிற்சி என்பது தாய்மொழியில் மாணவர்களின் பொதுத் திறன்களை மேலும் வளர்த்துக் கொள்ளவும், அதோடு வாசிப்பு, எழுதுதல் வழிமுறைகளுக்கு அடித்தளத்தையும் அமைக்கும்.»* [42] கேட்டல், பேசுதல் மற்றும் புரிதல் திறன்களுக்கு இன்றியமையாதது. ஆனால் தாய்மொழிக் கல்வியின் ஒரு முக்கிய அங்கமாகப் பண்பாட்டு அறிதலுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. இது தொடர்பாக பிலோமினம்மா இவ்வாறு எழுதுகிறார், *«நோர்வேயில் வளர்ந்து வரும் தமிழ்ச் சிறுவர்கள் தமிழ்ப் பண்பாடு மட்டுமல்ல, நோர்வேயியப் பண்பாட்டாலும் அதிக தாக்கத்திற்கு*

[41] இலங்கை தேசிய ஆவணகத்தின் இணையத்தளம் 11.10.2020 அன்று பார்வையிடப்பட்டது (http://www.archives.gov.lk/web/). எண்ணிம ஆவண அணுக்கத்திற்கான வசதி இணையத்தில் இல்லாததால் இதனைப் பற்றிய மேலதிகத் தகவல் தற்பொழுது அறியமுடியவில்லை.

[42] தமிழாக்கம். Kirke- og Undervisningsdepartementet (1987, p. 183)

உள்ளாகின்றனர். அவர்களின் அன்றாட வாழ்க்கை நோர்வேயிய கட்டமைப்பால் வடிவமைக்கப்படுகின்றது. இதை நாம் கவனத்தில் எடுத்துக்கொள்வது முக்கியம்.» [43]

«தமிழ் 2» தமிழ் பாடநூல்

Forord

Tamil 2 er bok nummer to i serien av lærebøker på tamil. Boken er beregnet til bruk i morsmåls-opplæringen av tamilske barn i den nye tredje klasse etter Reform 97.

I denne boken følger vi to tamilske barn, deres venner, skolekamerater og familie gjennom et helt år. Vi blir kjent med deres hverdagsliv i Norge, samtidig som vi får en liten innføring i natur, kultur og dyreliv på Sri-Lanka. Vi ser hvordan barna på mange måter deltar i norsk hverdagsliv, men også hvordan familiene tar vare på sine tradisjoner og lar sine norske venner få et innblikk i tamilsk kultur.

I boken får barna lære resten av tegnene i syllabariet. Lesestykkene er en blanding av opplevelses-lesning og lesestykker som barna selv kan mestre. Boken inneholder også rim, regler og dikt, både tradisjonelle og nye. Elevene blir kjent med eventyr fra Sri-Lanka og Norge.

Boken er rikt illustrert. Bildene gir god mulighet til samtale i undervisningen, slik at elevene kan utvikle et godt muntlig språk. Betydningen av dette er uttrykt i M87, kap. 24. Morsmål for språklige minoriteter: "Muntlig trening skal bygge opp og videreutvikle elevenes generelle ferdigheter i morsmålet, og legge grunnlag for den videre lese- og skriveopplæringen". Forfatteren har også tatt med en del sekvensbilder, slik at elevene selv kan gjengi handlingen i historiene muntlig og også selv skrive små setninger til.

Vi som har arbeidet med boken håper og tror at den vil være til glede og nytte for de lærerne som underviser i tamil, og for de barna som for første gang får en lærebok for 3.-klasse, tilpasset tamilske minoritetselever i Norge.

Lykke til med bruken av boken!

Anne-Lis Øvrebotten
Norsk pedagogisk konsulent

«தமிழ் 1» வெளியான பிறகு, பிலோமினம்மா 3 ஆம் வகுப்பிற்கு ஒரு பாடநூல் உருவாக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டார். முதல் பாடநூல் உருவாக்கி வெளியிட பல ஆண்டுகள் ஆனதால், அடுத்த நூலை 3 ஆம் மற்றும் 4 ஆம் வகுப்புகளுக்காக தயாரிப்பது என்று பிலோமினம்மாவும் இந்த வேலைத்திட்டத்திற்கான பொறுப்பாளரும் ஒரு இணக்கப்பாட்டிற்கு வந்தனர், என்று ஜோர்ஜ் மற்றும் தயாளன் கூறினார்கள். எனவே, பாடநூலில் உள்ள 1 மற்றும் 2 என்ற குறியீடுகளை நிலை 1, நிலை 2 என்று விளக்கலாம். ஃப்ரெடா மாக்னுசென் (Freda Magnussen) «தமிழ் 2» இற்கும் சித்திரப்பட ஓவியராகப் பணியைத் தொடர்ந்தார். தமிழ் ஆலோசகராக தயாளன் வேலாயுதப்பிள்ளை மற்றும் நோர்வேயிய ஆலோசகராக அன்னே-லிஸ் ஒவ்ரபொத்தன் (Anne-Lis Øvrebotten) ஆகிய இருவரின் உதவியுடன் சுமார் ஒன்றரை ஆண்டுகள் தொடக்கம் இரண்டு ஆண்டுகளில் பிலோமினம்மா «தமிழ் 2» பாடநூலை முழுமைப்படுத்தினார். «தமிழ் 2» என்ற பாடநூல் தேசிய கற்பித்தல் உதவி மையத்தின் ஆதரவுடன் 1997 ஆம் ஆண்டு ஒஸ்லோவில் உள்ள குல்தூர்ப்ரோ (Kulturbro) பதிப்பகத்தால் வெளியிடப்பட்டது.

«தமிழ் 2» பாடநூல் இரண்டு தமிழ் சிறுவர்கள் அவர்களின் நண்பர்கள், பள்ளித் தோழர்கள் மற்றும் குடும்பத்தினரோடு ஒரு வருடம் முழுவதும் தொடர்கின்றது. இது «தமிழ் 1» பாடநூலின் தொடர்ச்சியாகவும் அமைகின்றது. அத்தோடு தமிழ்ப் பண்பாட்டுக் கல்வியின் விரிவாக்கமாகவும் அமைகின்றது. இலங்கையில் உள்ள இயற்கை, பண்பாடு மற்றும் வனவிலங்குகள் பற்றிய ஒரு சிறிய அறிமுக அறிவைக் கொடுப்பதோடு, அதே நேரத்தில் நோர்வேயில் அவர்களின் அன்றாட வாழ்க்கையைப் பற்றிய அறிவும் அறிந்து கொள்ள இந்த நூல் வாய்ப்பளிக்கின்றது, என்று அன்னே-லிஸ் ஒவ்ரபொத்தன் எழுதுகிறார். இந்தப் பாடநூல் "சிறுவர்கள் நோர்வேயிய அன்றாட வாழ்க்கையில் எவ்வாறு பல வழிகளில் பங்கேற்கிறார்கள் என்பதைப் பேசுகின்றது, அதேவேளை குடும்பங்கள் எவ்வாறு தமது

[43] தமிழாக்கம். George (1995, p. 114)

மரபுகளை பாதுகாக்கிறார்கள் என்றும் அவர்களின் நோர்வேயிய நண்பர்களுக்கு தமிழ் பண்பாட்டைப் பற்றிய நுண்ணறிவைப் பெறவும் உதவுகிறார்கள்." [44], என்றும் அவர் மேலும் எழுதுகின்றார்.

சிறுவர்கள் மீதமுள்ள தமிழ் எழுத்துகளை «தமிழ் 2» பாடநூலில் கற்றுக்கொள்கிறார்கள். மேலும் கேட்டல், வாசித்தல் திறன்களையும், அத்துடன் தமிழில் பேசுதல், எழுதுதல் திறன்களையும் மேம்படுத்துகிறார்கள். இப்பாடநூலில் பாரம்பரிய மற்றும் புதிய சொல் விளையாட்டுகள் (rhymes), பாடல்கள், தமிழ் மற்றும் நோர்வேயியக் கதைகள் உள்ளடங்கியிருந்தன. M87 இன் 24 ஆம் அத்தியாயத்தின் அடிப்படையில் இந்த பாடநூலும் வாய்மொழிப் புலமைக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது.

«தமிழ் 2» பாடநூல் *«சீர்திருத்தம் 97 (Reform 97) இன் அடிப்படையில் புதிய மூன்றாம் வகுப்பு தமிழ் சிறுவர்களின் தாய்மொழிக் கல்வியில் பயன்படுத்த»[45] உருவாக்கப்பட்டது*. M87 பாடத்திட்டம் L97[46] ஆக திருத்தியமைக்கப்பட்டு 1997 இல் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. ஆகவே 1996-97 ஆம் ஆண்டில் முதல் வகுப்பு மாணவர்களாக இருந்தவர்கள் 1997-98ல் மூன்றாம் வகுப்பிற்குச் சென்றனர். சீர்திருத்தம் 97 காரணமாக, «தமிழ் 2» 3 ஆம் வகுப்பை நோக்காகக் கொண்டது. ஆனால் 4 ஆம் வகுப்பிலும் பயன்படுத்தலாம், என்று ஆசிரியர் வழிகாட்டியில் பிலோமினம்மா எழுதுகின்றார். «தமிழ் 1» மற்றும் «தமிழ் 2» ஆகிய இரண்டையும் நோர்வேயியப் பள்ளிகளில் தமிழ் தாய்மொழி ஆசிரியர்கள் பயன்படுத்தினர். நோர்வேயிய அரச பள்ளிகளில் தாய்மொழிக் கல்விக்கான கற்பித்தலின் தரத்தை உறுதி செய்வதில் இந்தப் பாடநூல்கள் ஒரு முக்கிய பங்காற்றியுள்ளன. மேலும், இது நோர்வேயியப் பள்ளிகளில்[47] பணியாற்றிய தாய்மொழி ஆசிரியர்களிற்கான ஒரு கற்பித்தல் உபகரணமாக அவர்களின் பணிச்சூழலை எளிதுபடுத்தியது.

"தமிழ் 1" மற்றும் "தமிழ் 2" பாடநூல்களின் முதல் பதிப்பிற்குப் பின், அவை ஓரிரு முறை மறுபதிப்பு செய்யப்பட்டன. பின்னர் நூல்களை மீள் அச்சு செய்வது நிறுத்தப்பட்டது. இதற்கு "தமிழ் 1" மற்றும் "தமிழ் 2" பாடநூல்கள் 1 ஆம் வகுப்பு முதல் 4 ஆம் வகுப்பு வரை மட்டுமே இருந்தது ஒரு காரணமாக இருந்திருக்கலாம், என்று ஜோர்ஜ் கூறுகிறார். மேலும், நோர்வேயில் வளர்ந்து வந்த அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் 1 முதல் 10 ஆம் வகுப்பு வரையிலான தமிழ் பாடநூல்களை சுயமாக உருவாக்கி வெளியிட்டனர். இருப்பினும், "தமிழ் 1" மற்றும் "தமிழ் 2" ஆகிய இரண்டு பாட நூல்களும் இருமொழி ஆசிரியர்களால் (bilingual teachers/ tospråklige lærere)[48] 2010 ஆம் ஆண்டு வரை பேர்கன் நகராட்சி பள்ளிகளில் பயன்படுத்தப்படடன, என்று 2010 இல் தனது பணியிலிருந்து ஓய்வு பெற்ற அன்னே-லிஸ் கூறுகிறார். ஆனால் கரோலின் மற்றும் தயாளனின் கூற்றுப்படி, அவை இன்றும் நோர்வேயிய பள்ளிகளிலும் அன்னை பூபதி தமிழ் கலைக்கூடத்தின் பேர்கன் கிளையிலும் ஒரு துணைக் கற்பித்தல் உபகரணமாக பயன்படுத்தப்படுகின்றது.

இதைத் தொடர்ந்து பாடநூல் உருவாக்கத் திட்ட மேலாளர் பணிமாற்றம் பெற்றுச் சென்றவுடன் 5 ஆம் மற்றும் 6 ஆம் வகுப்புகளிற்கான தமிழ் பாடநூல்களை உருவாக்கும்

---

[44] தமிழாக்கம். George (1997, p. 5)

[45] தமிழாக்கம். George (1997, p. 5)

[46] Kirke- and Nasjonalt læremiddelsenter (1996)

[47] George (1995, p. 4)

[48] தாய்மொழி ஆசிரியர்கள் படிப்படியாக இருமொழி ஆசிரியர்களாக பணிமாற்றம் செய்யப்பட்டனர்.

வாய்ப்பு தொடர்ந்து பிலோமினம்மா பெறவில்லை, என்று ஜோர்ஜ் கூகி நிறைவு மீட்டினார். சீர்திருத்தம் 97 இற்குப் பின், தாய்மொழிக் கல்வியும் படிப்படியாக இருமொழிக் கல்வியாக மாற்றப்பட்டது. மேலும், 01.09.1998[49] அன்று கற்றல் மையம் (Læringssenteret) நிறுவப்பட்டபோது தேசிய கற்பித்தல் உதவி மையம் (Nasjonalt læremiddelsenter) மூடப்பட்டது.

"தமிழ் கற்பித்தல் ஒரு கடினமான பணியாகும், குறிப்பாக இந்த நாட்டில் பிறந்து வளர்ந்த சிறுவர்களுக்கு. ஆசிரியர்களாகிய நாம் நமது கடமையைச் செய்யும்போது, இந்தப் பணியில் வெற்றிபெற முடியும். வகுப்பு ஆசிரியர் மற்றும் பெற்றோருடன் எங்களுக்கு நல்ல ஒத்துழைப்பு இருப்பது மிகவும் முக்கியம் »- பிலோமினம்மா[50]

[49] Department of HR and Archives, Directorate of Education (Utdanningsdirektoratet)

[50] George (1997, p. 9)

நோர்வேயில் தமிழ்மொழிக் கற்பித்தல் மற்றும் தமிழ் பள்ளிக்கூடங்கள்

இந்தப் பட்டியலிலுள்ள சில தமிழ்ப்பள்ளிக்கூடங்கள் இன்று செயல்பாட்டில் இல்லாமல் இருக்கலாம். இன்னும் பிற இன்று செயல்பாட்டில் இருக்கலாம். முன்பே குறிப்பிட்டது போல், நோர்வேயில் உள்ள சிறிய நகரங்கள் மற்றும் கிராமங்களில் தமிழ் சங்கங்கள் தமிழ்மொழிக் கல்வியை குறுகிய அல்லது நீண்ட காலத்திற்கு வழங்கி வந்துள்ளன. இப்பட்டியலைப் புதுப்பிக்க வேண்டுமானால் உரிய தரவுகளுடன் அறியத்தரவும்.

சில தமிழ்ப் பள்ளிக்கூடங்களின் ஆரம்பத்திகதி Brønnøysund அரச பதிவகம், வாய்மொழி வரலாறுகள், இணையதளம் மற்றும் தமிழ்ப் பள்ளிக்கூடங்களின் ஆண்டு விழா மலர்களில் மாறுபடுகின்றன.

År/ ஆண்டு	**Navn/** பெயர்	**Sted/** இடம்
28.03.1987	**பேர்கன் தமிழ்ச் சிறுவர் பாடசாலை** Bergen tamilsk barneskole	Bergen
26.06.1988 Stoppet 1990 Startet igjen 1993-94 26.06.1988 (Brreg)	**தமிழ் நோர்வே மக்கள் இணைவுக்கூடம்** **ஆரம்பிக்கப்பட்ட தமிழ்மொழிக் கல்வி.** **பின்னர் முத்தமிழ் அறிவாலயம்.** Språkopplæring i tamil startet av tamilsk-norsk forening/ tamilsk-norsk kafe. Senere Muthamil Arivalayam	Oslo
Slutten av 1980-tallet. Stoppet etter kort periode	இஸ்ரவங்கர் புனித ஸ்விதுன் கத்தோலிக்க **தேவாலயத்தில் தமிழ்மொழிக் கல்வி** Språkopplæring i tamil på St. Svithun katolske kirke i Stavanger.	Stavanger
01.02.1992	**அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம்** **(இன்று றொம்மன் வளாகம்)** Annai Poopathi Tamilsk Kultursenter (Idag kjent som lokallaget Rommen)	Oslo
01.08.1992	**இஸ்ரவங்கர் தமிழ் சிறுவர் பாடசாலை** (ஈழத் தமிழர் சங்கம் றூகலாண்ட்) Tamilsk Barn og Ungdomsaktivitetssenter i Stavanger (Eelam Tamilenes Forening i Rogaland)	Stavanger
1993 Stoppet rundt 1997 Startet igjen 1999	**சிறுவர் ஒன்றுகூடல். பின்னர் தமிழ்ப் பள்ளிக்கூடம்.** (சோர சுண்மோர தமிழ் கலை கலாச்சாரச் சங்கம். பின்னர் சுண்மோர தமிழ் கலாச்சாரச் சங்கம்) Barnetreff. Senere tamilskole (Søre Sunnmøre Tamil Kunst Kultur Forening. Senere Sunnmøre Tamilsk Kultur Forening)	Hareid

20.03.1994	எம் தமிழ் அறிவாலயம் **M Tamil Arivaliyam**	Oslo
1995	சிறுவர் மன்றம் (ஈழத் தமிழர் சங்கம் - துரண்ணியம்) **Children Activity Centre (Eelam Tamilar Sangam - Trondheim)**	Trondheim
1997	**தமிழ் அறிவாலயம் (அஸ்கர் மற்றும் பாறும் தமிழர் ஒன்றியம்)** Tamil Arivaliyam (Asker og Bærum Tamilske forening)	Asker og Bærum
01.09.2001 **01.02.2001** (Brreg)	**அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் - தொய்யன்** Annai Poopathi Tamilsk Kultursenter - Tøyen	Oslo
01.02.**2002**	**அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் - லோற்ன்ஸ்கூக்** Annai Poopathi Tamilsk Kultursenter - Lørenskog	Akershus
16.02.2002	**அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் - திறம்மன்** Annai Poopathi Tamilsk Kultursenter - Drammen	Akershus
10.02.2002 31.08.2002 (Brreg)	**அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் - துரண்கெய்ம்** Annai Poopathi Tamilsk Kultursenter - Trondheim	Trondheim
19.04.2002 21.01.2012 (Brreg)	**அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் - பேர்கன்** Annai Poopathi Tamilsk Kultursenter - Bergen	Bergen
22.12.2002	**அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் - தலைமை நிர்வாகம்** Annai Poopathi Tamilsk Kultursenter - Sentralstyre	Oslo
04.05.2002	**அவ்வை தமிழ்க் கலைக்கல்லூரி** Norges Avvai tamilsk barn og ungdoms kultur aktivitets senter	Oslo
26.10.2003 26.09.2003 (Brreg)	**அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் - உல்ஸ்ரைன்விக்** Annai Poopathi Tamilsk Kultursenter - Ulsteinvik	Ulstein
10.01.**2004**	**அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் - ஸ்ரவங்கர்** Annai Poopathi Tamilsk Kultursenter - Stavanger	Stavanger
24.01.2004	**அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் - புளோறோ** Annai Poopathi Tamilsk Kultursenter - Florø	Florø
16.10.2004	**அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் - வைத்வெத்**	Oslo

21.08.2004 (Brreg)	Annai Poopathi Tamilsk Kultursenter - Veitvet	
23.10.2004	**அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் - போர்த** Annai Poopathi Tamilsk Kultursenter - Førde	Førde
28.11.2004	**அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் - மோல்டே** Annai Poopathi Tamilsk Kultursenter - Molde	Molde
12.02.2005 **26.02.2005** (Brreg)	**அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் - அஸ்கர் மற்றும் பாறும்** Annai Poopathi Tamilsk Kultursenter – Asker og Bærum	Asker og Bærum
12.03.2005 Stoppet (?). Startet igjen i 2019 som Vestfold lokallag	**அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் - தொன்ஸ்பேர்க்** Annai Poopathi Tamilsk Kultursenter - Tønsberg	Tønsberg
12.03.2005 20.03.2005 25.03.2005 (Brreg)	**அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் - ஓலசுண்ட்** Annai Poopathi Tamilsk Kultursenter - Ålesund	Ålesund
03.04.2005	**அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் - பிலக்கபியுர்ட்** Annai Poopathi Tamilsk Kultursenter - Flekkefjord	Flekkefjord
03.09.2005	**அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் - ஒஸ்றபோல்ட்** Annai Poopathi Tamilsk Kultursenter – Østfold	Østfold
28.11.**2005**	**அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் - அக்குறா** Annai Poopathi Tamilsk Kultursenter - Aukra	Aukra
05.08.2006	**அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் - ஸ்ரூர்டால்** Annai Poopathi Tamilsk Kultursenter - Stordal	Stordal
07.02.2012 **07.01.2012** (Brreg)	**அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் - மொட்டன்ஸ்றுட்** Annai Poopathi Tamilsk Kultursenter - Mortensrud	Mortensrud
02.02.2019	**அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் - வெஸ்ட்பொல்ட்** Annai Poopathi Tamilsk Kultursenter - Vestfold	Vestfold
15.10.2021	**அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் - கிரிஸ்டியான்சண்ட்** Annai Poopathi Tamilsk Kultursenter - Kristiansand	Kristiansand

மேற்கோள்கள்

Aiyathurai, T. (Ed.) (2006). *பிலோமினம்மா ஜோர்ஜ்: நெஞ்சில் வாழும் பூக்கள்*. Paris: George family.

Annai Poopathi Tamilsk Kultursenter - Rommen. (1994). *Annai Poopathi Tamilsk Kultursenter 2 års jubileumsbok*. Oslo: Annai Poopathi Tamilsk Kultursenter - Rommen.

Annai Poopathi Tamilsk Kultursenter - Rommen. (1997). *Annai Poopathi Tamilsk Kultursenter 5 års jubileumsbok*. Oslo: Annai Poopathi Tamilsk Kultursenter - Rommen.

Annai Poopathi Tamilsk Kultursenter - Rommen. (2007). *Annai Poopathi Tamilsk Kultursenter - Rommen 15 års jubileumsbok*. Oslo: Annai Poopathi Tamilsk Kultursenter - Rommen.

Balasingham, A. (2002). *சுதந்திர வேட்கை*. Mitcham: Fairmax Publishing Ltd.

Brønnøysundregistrene. (n.a.-a). Nøkkelopplysninger fra Enhetsregisteret - Annai Poopathi Tamilsk Kultursenter, Rommen - *அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம், றொம்மன்*. Org. 998058422. Retrieved from https://w2.brreg.no/enhet/sok/detalj.jsp?orgnr=998058422

Brønnøysundregistrene. (n.a.-b). Nøkkelopplysninger fra Enhetsregisteret - Annai Poopathi Tamilsk Kultursenter, sentral - *அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம், தலைமை*. Org. 985315515. Retrieved from https://w2.brreg.no/enhet/sok/detalj.jsp?orgnr=985315515

Brønnøysundregistrene. (n.a.-c). Nøkkelopplysninger fra Enhetsregisteret - Eelam Tamilar Sangam - Trondheim - *ஈழத் தமிழர் சங்கம் - துரண்ணியம்*. Org. 987461349. Retrieved from https://w2.brreg.no/enhet/sok/detalj.jsp?orgnr=987461349

Brønnøysundregistrene. (n.a.-d). Nøkkelopplysninger fra Enhetsregisteret - Eelam Tamilenes Forening i Rogaland - *ஈழத் தமிழர் சங்கம் றூகலாண்ட்*. Org. 911768127. Retrieved from https://w2.brreg.no/enhet/sok/detalj.jsp?orgnr=911768127

Brønnøysundregistrene. (n.a.-e). Nøkkelopplysninger fra Enhetsregisteret - Muthtamil Arivalayam - *முத்தமிழ் அறிவாலயம்*. Org. 919673656. Retrieved from https://w2.brreg.no/enhet/sok/detalj.jsp?orgnr=919673656

Brønnøysundregistrene. (n.a.-f). Nøkkelopplysninger fra Enhetsregisteret - Stiftelsen Tamilsk Ressurs og Veiledningssenter - *அறக்கட்டளை தமிழர் வள ஆலோசனை மையம்*. Org. 976599489. Retrieved from https://w2.brreg.no/enhet/sok/detalj.jsp?orgnr=976599489

Brønnøysundregistrene. (n.a.-g). Nøkkelopplysninger fra Enhetsregisteret - Tamilsk Barn- og Ungdomsaktivitetssenter - இஸ்ரவங்கர் *தமிழ் சிறுவர் பாடசாலை*. Org. 895101052. Retrieved from https://w2.brreg.no/enhet/sok/detalj.jsp?orgnr=895101052

Brønnøysundregistrene. (n.a.-h). Nøkkelopplysninger fra Enhetsregisteret - Tamilsk-norsk forening - *தமிழ் நோர்வே மக்கள் இணைவுக்கூடம்*. Org. 992938730. Retrieved from https://w2.brreg.no/enhet/sok/detalj.jsp?orgnr=992938730

Eelam Tamilenes Forening i Rogaland. (08.04.2022). Eelam Tamilenes Forening i Rogaland. Retrieved from http://thamilsangamnorsk.blogspot.com/p/hjem.html

Fatimaharan, R. (1993). *Tamil writing in new method*. London: S .J. Fatimaharan.

George, P. (1995). *Tamil 1*. Oslo: Kulturbro Forlag.

George, P. (1997). *Tamil 2*. Oslo: Kulturbro Forlag.

Geroge Family (Ed.) (2014). *நெஞ்சில் நீங்காத நினைவுகள்: நாட்டுப்பற்றாளர் திருமதி பிலோமினம்மா ஜோர்ஜ் ஒரு அரசியற் சரித்திரம்*. Bergen: George Family.

Kirke- og Undervisningsdepartementet. (1987). *Mønsterplan for grunnskolen Bokmål: M87*(pp. 181-186). Retrieved from https://www.nb.no/items/2aef891325a059851965d5b8ac193de5?page=181&searchText=l%C3%A6replan%20M87%20morsm%C3%A5l
Kirke-, u.-o. f., & Nasjonalt læremiddelsenter. (1996). *Læreplanverket for den 10-årige grunnskolen*. Retrieved from https://urn.nb.no/URN:NBN:no-nb_digibok_2008080100096 | side
Kumarendiran, B. (2020a). Oral history. Retrieved from https://diasporatamil.no/2020/08/30/oral-history-eng/
Kumarendiran, B. (2020b). Tamil Eelam liberation struggle documents: part 1. Retrieved from https://diasporatamil.no/2020/11/16/tamil-eelam-liberation-doc-part1-tamil/
Kumarendiran, B. (2020c). Tamil Eelam liberation struggle documents: part 2. Retrieved from https://diasporatamil.no/2020/11/21/tamil-eelam-liberation-doc-part2-tamil/
PEARL. (n.a.). Black July: A Tamil Genocide. Retrieved from https://pearlaction.org/rememberingblackjuly/
Pugh. C., D. (2005?). *En Folkehelt går bort i flodbølgen: Philominammah George: En politisk biografi*. PDF file stored in CD. Bergen.
Tamil Coordinating Committe. (1989). *சுதந்திரதாகம் (Cutantiratakam - tørst etter frihet)*.
Tamil Coordinating Committe. (1990). *சுதந்திரதாகம் (Cutantiratakam - tørst etter frihet)*.
TamilNet. (2008). Eezham Thamizh and Tamil Eelam: Understanding the terminologies of identity. Retrieved from https://www.tamilnet.com/art.html?catid=99&artid=27012
TamilNet. (2013). Vanni, Vanniyan-madu, Vanniyanaar-madu. Retrieved from https://www.tamilnet.com/art.html?catid=98&artid=36403
TamilNet. (2017). Kiḷi-nocci, Nocci-mōṭṭai, Nocciyā-gama, Nika-vala. Retrieved from https://www.tamilnet.com/art.html?catid=98&artid=22453
Tamilsk Barne- og Ungdomsaktivitetssenter - Stavanger. (2007). *Arumbu 15 års jubileumsbok*. Stavanger: Tamilsk Barne- og Ungdomsaktivitetssenter - Stavanger.
Veluppillai, A. (1997). Language. Retrieved from https://www.tamilnet.com/img/publish/2015/11/Tamil_Language_and_Eelam_Tamils_by_Prof_A_Veluppillai_July_1997.PDF
Vijasan. (27.02.2016). *தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் நாட்டுப்பற்றாளர்களின் விபரம்*. Retrieved from https://www.eelamview.com/2016/02/27/naaddu-pattalar/

பொதுச்சுவடிகள்

Arkiv etter Administrasjon for morsmålsundervisning for språklige minoriteter (1990-2005) Bergen Byarkiv (Bergen City Archive) https://www.bergen.kommune.no/omkommunen/avdelinger/bergen-byarkiv
Arkiv etter Nasjonalt læremiddel senter. Arkivverket (National Archives of Norway) https://www.arkivverket.no/ https://www.digitalarkivet.no/
Avdeling for HR og arkiv, Utdanningsdirektoratet (Directorate of Education) https://www.udir.no/
Elektronisk register "FS", arkiv etter eksamen tatt siden 1967 på Universitet i Oslo (UiO) https://www.uio.no/
Seksjon for dokumentasjonsforvaltning, Universitetet i Bergen (UiB) https://www.uib.no/

வாய்மொழி வரலாறு நேர்காணல்கள், வாய்மொழி தகவல்கள் மற்றும் பிற தகவல் தொடர்பாடல்கள்

Aiyathurai, T. (19.06.2020). Redaktor for minneboken om Philominamma George (2006). Muntlig historie intervju. [Paris, Frankrike, mobil].

Bastiampillai, K. B. (22.06.2020). Leder for barnetreff ved Sunnmøre Tamilsk Kultur Forening. Brettspill på tamil. Muntlig historie intervju. [Hareid, mobil].

Devasagayam, K. (31.10.2024). En i den første gruppen av tidligere elever av Tamilsk Barn og Ungdomsaktivitetssenter i Stavanger (1992-?). Instagram og e-post korrespondanse. [Stavanger].

Fatimaharan, R. (07.06.2020 og 08. oktober 2020). Forfatter av boka “Tamil writing in new method” (1993). Muntlig historie intervju. [Oxford, England, mobil].

Ilayathambi, K. (24.05.2018, 26.05.2018 og 27.05.2018). Styremedlem Annai Poopathi Tamilsk Kultursenter (1994-1997), ansvarlig for lærebokutvalget (1994-1997) og styremedlem i Tamilsk Ressurs og Veiledningssenter (1996-2002). Muntlig historie intervju og muntlig opplysning. [Oslo, fysisk og mobil].

Kopinath, J. (11.05.2020). Student som hjalp med tamil datamaskin font for “Tamil 1” Bokprosjekt (1995). Muntlig historie intervju. [Oslo, mobil].

Manuelpillai, J. (23.08.2020). Morsmålslærer (1985-1986) og deretter morsmålstrener fra 1986 til sin pensjon. Telefon samtale. [Bergen, mobil]

Maaran. (28.09.2020). Medlem Tamilar Nalanpuri Mantram, Oslo (1984-1989), medlem Tamil Coordinating Committee, Oslo (1989-2000) og leder Tamil Coordinating Committee, Oslo (1990-1995). Muntlig historie intervju. [Mobil].

Rajadurai, P. (15.06.2020). Leder for Children Activity Centre ved Eelam Tamilar Sangam – Trondheim. Muntlig historie intervju. [Trondheim, Mobil].

Rajendram, S. (08.06.2020). Enken til Antony Rajenram, som startet Bergen Tamilsk Barneskole (1987). Muntlig historie intervju. [Bergen, Mobil].

Ratnasingam, N. (06.06.2020, 20.06.2020 og 25.06.2020). Tamil konsulent for “Tamil 1” (1995) bokprosjekt. Muntlig historie intervju. [Oslo, mobil].

Santhiyapillai, S. (25.05.2020 og 04.06.2020). Rektor for Bergen Tamilsk Barneskole (1987-2019). Muntlig historie intervju. [Bergen, Mobil].

Sivabalasingam, S. (11.06.2020 og 18.06.2020). Lærer ved organisert språkundervisning av tamilsk-norsk forening/ tamilsk-norsk kafe (1988-1990), og rektor ved Annai Poopathi Tamilsk Kultursenter - Rommen (1992-2012). Muntlig historie intervju. [Oslo, Mobil].

Subramaniam, A. (30.07.2020). Tamilsk-norsk forening/ tamilsk-norsk kafe (1987-nå). Muntlig historie intervju. [Oslo, fysisk møte].

Thamba, C. (30.07.2020). Tamilsk-norsk forening/ tamilsk-norsk kafe. Muntlig historie intervju. [Oslo, fysisk møte].

Thevanathan, C. (13.05.2020, 14.05.2020 og 28.07.2020). Datteren til Philominamma George. Muntlig historie intervju. [Bergen, mobil].

Thommai Madutheenu, G. (17.05.2020 og 18.05.2020). Mannen til Philominamma. Muntlig historie intervju. [Bergen, mobil].

Utnem, S. (11.09.2020). Prest på Tøyen kirke, hvor organisert språkundervisning av tamilsk-norsk forening/ tamilsk-norsk kafe tok sted. Muntlig historie intervju. [Oslo, Mobil].

Varman. (30.09.2020). Medlem Tamilar Nalanpuri Mantram, Oslo (1984?-1989) og medlem Tamil Coordinating Committee, Oslo (1989) og Medlem Tamil Coordinating Committee, Bergen (? - ?). Muntlig historie intervju. [Mobil].

Velauthapillai, D. (26.06.2020 og 05.07.2020). Tamil konsulent for «Tamil 1» (1995) og «Tamil 2» (1997) bokprosjekt. Muntlig historie intervju. [Bergen, mobil].

Øvrebotten, A.-L. (05.07.2020). Norsk konsulent for "Tamil 1" (1995) og «Tamil 2» (1997) bok prosjekt. Muntlig historie intervju. [Bergen, mobil].